விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 15 சனிக்கிழமை (27.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 70

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# 8 நாடாளுமன்ற ஆசனங்களுக்காக

# யாழ்ப்பாணத்தில் 324 பேர் போட்டி

## நாடு முழுவதும் 7265 வேட்பாளர்கள் களத்தில்

(யாழ்ப்பாணம்)

**எட்டு நாடாளுமன்ற ஆசனங்களுக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து 324 பேர் போட்டியிடுகின்றனர். இத் தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருந்து 15 அரசியல் கட்சிகளும், 12 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. நாடு முழுவதிலும் 196 நாடாளுமன்ற ஆசனங்களுக்காக 7 ஆயிரத்து 265 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.** *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## தேசியப் பட்டியலில் முரளிதரன்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் இடம்பெறுகின்றவர்களின் பெயர்ப் பட்டியலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திடம் நேற்றுக் கையளித்தார்.

பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களின் விபரம் வருமாறு,

ரத்னசிறி விக்கிரமநாயக்க, டி.எம்.ஜயரத்ன, டளஸ் அழகப் *(02 ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னி மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டி

(வவுனியா)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு,ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி,புளொட் கட்சி ஆகிய கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களின் சார்பில் 252 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினரும் *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## தேர்தல் வன்முறையில் 10 வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் கால எல்லைகள் முடிபடைவதற்கு முன்னரே தென்னிலங்கையில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

நடைபெறவுள்ள ஏழாவது நாடாளுமன்றத் தேர்தல் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் கால எல்லை நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

எனினும் வேட்புமனுத் தாக்கல் முடிபடையும் முன்னரே *(16 ஆம் பக்கம் பார்க்க)*

# முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களை கைது செய்ய பொன்சேகா உத்தரவிட்டார்



## பாதுகாப்புச் செயலர் செவ்வி

(கொழும்பு)

முகாமிலிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் அவர்களை மீண்டும் முகாமிற்கு இழுத்துவருமாறு சரத் பொன்செகா உத்தரவிட்டார் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

20 ஆயிரம் விடுதலைப்புலிகள் தடுப்பு முகாமிலிருந்து தப்பிச் செல்லும் போது சரத் பொன்சேகா அந்த முகாம்களின் பாதுகாப்புக் குறித்து வாதிட்டதாகப் *(16 ஆம் பக்கம் பார்க்க)*



## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக மற்றுமொரு வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மற்றுமொரு அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணிக் கட்சியின் செயலாளர் சர்மிளா பெரேராவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நான்கு தேர்தல் தொகுதிகளில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகவும் அந்தத் தேர்தல் தொகுதிகளின் வாக்கெடுப்பு சூன்யமாக்கப்பட வேண்டும் எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜனாதிபதி வெல்வது இலகுவானதல்ல

### ரொய்ட்டர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மகிந்த அரசு வெல்வது இலகுவானதல்ல என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்த எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்குள் தற்போது பிளவுகள் தோன்றியுள்ளன.



பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் இந்த நிலை *(02 ஆம் பக்கம் பார்க்க)*







நாடாளுமன்றத் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் பணிமனைக்குச் சென்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வேட்பாளர்களைப் படங்களில் காணலாம். (படங்கள்:- ரம்சன்)

இடம் பெயர்ந்து யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.
இதில் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## யாழ்ப்பாணக் கல்விவலய அதிபர்களிற்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களிற்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் இன்று காலை 9மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ச-14)

## கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் 51வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் போரினால் பாதிப்படைந்த மற்றும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களிற்கு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினால் 51 நிரந்தர வீடுகள் 40.8 மில்லியன் நிதிச் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ் வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 10.00மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், சிறப்பு விருந்தினராக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச-14)

# வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்ற தீர்மானங்கள் நடைமுறையில்

## யாழ்-அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

கடந்த 19ஆம் திகதி யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மீள்குடியேற்ற தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

✷ வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையினால் பஸ்வண்டிகள் பின்வரும் பாதை வழிகளில் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**தெல்லிப்பளை – மாவிட்டபுரம்– கீரிமலை மற்றும் சேந்தான்குளம் – கீரிமலை.**

✷ தெல்லிப்பளை சந்தி ஊடாக மகாஜனா கல்லூரிக்கு செல்லும் வீதி; மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வீதியூடாக பாடசாலை பஸ்சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

✷ 600 மீற்றர் உயர்பாதுகாப்பு வலயம் மீள்குடியேற்றத்திற்கு ஆயிரத்து 601குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 537 அங்கத்தவர்களுக்கான அனுமதி கிடைக்கப்பெற்று அவற்றில் 509 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 760அங்கத்தவர்கள் ENReP திட்டத்தின் உதவியுடன் காணிகள் துப்பரவாக்கும் பணிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

✷ தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலை, புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் என்பன மாவட்ட கட்டளைத் தளபதி, பாதுகாப்பு படை அதிகாரிகள், அரசாங்க அதிபர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ஆகியோர் 23.02.2010ஆம் திகதி மேற்குறிப்பிட்ட இடங்களை நேரடியாக சென்று மீள் குடியேற்றம் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினை உடனடி யாக மீளவும் சொந்த இடத்தல் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு, துப்பரவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

✷ தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலை மற்றும் புற்றுநோய் வைத்தியசாலை என்பவற்றினை சொந்த இடத்தில் மீள ஆரம்பிப்பதற்கான பாதுகாப்பு அனுமதி மிக விரைவில் பெற்றுக்கொடுப்பதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளார் என்றுள்ளது. (ச)

## மூன்றில் இரண்டு பெரும்...

ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எதிர்க்கட்சிகளின் இந்தப்பிரிவினை மகிந்த ராஜபக்ஷவுக்கு அனு கூலங்களை ஏற்படுத்தலாம். அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எதிர்பார்க்கின்றார். இலங்கையின் அரசியல் சட்டங்களை மாற்றுவதற்கும் புதியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளைப் பெறவும் அரசுக்கு இந்தப் பெரும்பான்மை அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனை ஆகிய இரு கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சிகள். அவை இரண்டும் தமக்குள் உள்ள வேற்றுமைகளை விடுத்து ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவை ஆதரித்தன. எனினும் அவர் 18 இலட்சம் வாக்குகளால் தோல்வி கண்டிருந்தார். மகிந்த முறைகேடான வெற்றியைப் பெற்றதாகக் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

எதிர்கட்சிகளின் பிரிவினைக்கு கொள்கைகளே காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டத் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். எனினும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மகிந்த வெல்வது இலகுவானதல்ல என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## தேசிய பட்டியலில்....

பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எம்.எச். மொஹமட், பேராசிரியர் விஸ்வ வர்ணபால, டியூ.குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கீதாஞ்ஜன குணவர்த்தன, எல்லாவல மேதானந்த தேரர், முத்து சிவலிங்கம், சண்முகம் ஜகதீஸ்வரன், அசல ஜாகொட, எம்.எப். எம்.முஸம்மில், டப்ளியூ.ஜே.எம்.லொக்கு பண்டார, விநாயகமூர்த்தி முரளிதரன்,

அனுருத்த ரத்வத்த, ஓமல்பே சோபித்த தேரர், ஜே.ஆர்.பி.சூரியப்பெரும, ஜே.எம்.ஜே. பிரியன்த பண்டார, பேராசிரியர் ராஜிவ விஜேசிங்க, லெஸ்லி தேவேந்ர, சந்திரசேகரன் சண்முகநாதன்,

ஏ.எச்.எம்.அஸ்வர், மாலினி பொன்சேகா, கலாநிதி ஹரிச்சந்ர விஜேதுங்க, சரத் கோன்கஹகே, யூ.எல்.ஷாஹுல் ஹமீத், கமலா ரணதுங்க. (ச-5)


### பில்கிளார்க், சந்தைப்படுத்துநர் உடன் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு பில் கிளார்க் 3பேரும், சந்தைப்படுத்துநர் 5 பேரும் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
0773866250
(ஜ-4415)

### தேவை

பழைய காட்போட் 1Kg 5/=, பழைய பிளாஸ்டிக் கதிரை கிலோ 20/=, கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள் கூடிய விலைக்கு வாங்கப்படும்.

**நிஹோன் டிரேடர்ஸ்**
வைத்தீஸ்வரா பாடசாலைச் சந்தி,
204,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (435)

### விற்பனைக்கு

கோப்பாய் பூதர்மடத்தடியில் பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொலைபேசி:-
071 5619506
(488)


## வெளிவாரிப் பட்டதாரிகளுடன் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான பட்டச்சான்றிதழ் வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல் ஆரியகுளத்தில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற உள்ளது.

எனவே 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரிகள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர்கள் வேண்டிக் கொள்கிறார்கள். (ச)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பகுதியில் நேற்று இடம் பெற்ற விபத்து சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக் கொண்டதிலேயே இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அல்வாயைச் சேர்ந்த எஸ்.சந்திரமேனன் (வயது-31) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-9)

## குடித்தொகை அபிவிருத்தி கற்கை வாய்மொழிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டப் பின்படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்பட்ட குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறியைப் பயின்று ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை (Oral Examination) நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளதாக இக்கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் அறிவித்துள்ளார். (ச-14)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோண்டாவில்)

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு வித்தியாலய உள் மைதானத்தில் அதிபர் எஸ்.சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும், சட்டத்தரணியுமான திருமதி ஞானலோஜினி சிவஞானம், சிறப்பு விருந்தினராக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ரி.சிவகுமார், கௌரவ விருந்தினராக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் திருமதி வி.கடம்பமலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)


### உடன் தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங் (தமிழ், ஆங்கிலம்), போட்டோ பிரதி செய்தல் நன்கு தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**New Global Star,**
Ramanathan Road,
Thirunelvely.
தொலைபேசி இல: 021 222 6951, 077 952 2444, 078 503 0774
(492)

### பொதுச் சபைக் கூட்டம் - 2010

நாளை (28.02.2010) ஞாயிறு காலை 10.00 மணிக்கு யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்,
செயற்குழுசார்பில்.
(802)

# இன்று ஒரு தகவல்

## தீர்மானிக்கும் திறமை

எனக்குத் தெரிந்த அதிகாரி ஒருவர் இருந்தார். அவருக்குக் கீழே நிறையப்பேர் வேலை பார்த்தார்கள்.

அந்த அதிகாரி விபரம் தெரிந்தவர் அனுபவசாலி.

அவரை ஒருநாள் பார்க்கப் போயிருந்தேன். அவ்ருடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

அந்தச்சமயத்தில் அவரிடம் வேலை பார்க்கும் ஒருத்தர் ஏதோ ஒரு பிரச்சினையுடன் அவரிடம் வந்தார்.

அவர்களுடைய அலுவலகம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை.

"இந்தப் பிரச்சினையை எப்டிச் சமாளிக்கலாம்? இதற்கு என்ன தீர்வு?'' என்று இவரிடம் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

இவர் ஒரு பெரிய அதிகாரி. உடனே அந்தப்பிரச்சினைக்கு என்ன தீர்வென்பதை அவரிடம் சொல்லி அனுப்ப வேண்டியது தானே. அப்படிச் செய்யவில்லை. வந்தவரை உட்கார வைத்து அவருடைய வாயாலேயே பிரச்சினையைத் தெளிவாக விளக்கச் சொன்னார்.

அதற்கு என்ன காரணமாக இருக்கும் என்பதையும் அவருடைய வாயாலேயே சொல்லச் சொன்னார். இந்தப் பிரச்சினைக்கு என்னென்ன முறைகளில் தீர்வு காணலாம் என்பதையும் அவரிடமே கேட்டார்.

அவர் சிறிது நேரம் யோசித்துப் பார்த்துவிட்டு நாலைந்து தீர்வுகளைச் சொன்னார். அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அந்த வழியிலேயே அதை செய்து முடித்து விடுங்கள் என்று அவரிடம் சொல்லியனுப்பினார். பிரச்சினையுடன் வந்தவர் அதற்கான தீர்வுடன் திரும்பிப் போய்விட்டார்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நான் அவரிடம் "ஏன் சேர்... உங்களுக்குக் கீழே வேலை பார்க்கும் அந்தப் பணியாளர் உங்களிடம் வந்தால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானே வருகிறார். நீங்கள் என்னவென்றால் அவரையே உட்காரவைத்து அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே இதுதான் நிர்வாகமா? என்று கேட்டேன்.

''ஆமாம்'' என்றார் அவர். அதன் பின் விளக்கமும் கொடுத்தார்.

நம்மிடம் வேலைபார்க்கும் ஒருத்தர்... பிரச்சினையோடு மட்டும் நம்மிடம் வருபவராக இருக்கக் கூடாது. அப்படி அவர் வரும் போதே அதற்கான நாலைந்து தீர்வுகளையும் கொண்டு வருபவராக அவர் இருக்க வேண்டும்.

அந்த அளவுக்கு அவரைத் தயார் படுத்த வேண்டியது நமது பொறுப்பு.

ஒரு விடயத்தைத் தீர்மானிப்பவர் அல்லது முடிவெடுப்பவர் வெறுமனே தீர்மானிப்பவராக மட்டும் இருக்கக் கூடாது. தீர்மானிக்கக் கற்றுக் கொடுப்பவராகவும் இருக்க வேண்டும்.

அப்படிக் கற்றுக் கொடுத்தால் தான் அவர் முன்னேற முடியும்.

அவர்களே பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்கும் அதற்குச் சரியான தீர்வு கண்டுபிடிப்பதற்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

அப்படிக் கொடுத்தால் அவர்களுடைய வளர்ச்சிக்கு நாம் உதவுகிறோம் என்று அர்த்தம்.

அப்படிச் செய்யாமல் பிரச்சினையுடன் வருபவர்களை உட்கார வைத்து நாம் யோசித்து முடிவு சொல்லி அனுப்பினால் அவர்களுடைய வளர்ச்சிக்கு நாம் தடையாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

இதைப் புரிந்து கொண்டு ஒரு தலைமை அதிகாரி தனக்குக் கீழே உள்ள பணியாளர்களைப் பழக்கப்படுத்த வேண்டும்.

பிரச்சினைகளைக் கொண்டு வருபவர்களே அதற்கான சில தீர்வுகளையும் கொண்டு வரும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

அப்படி இல்லாமல்...

அதைத் தீர்மானிப்பதற்கு நீயார்... இங்கே நான் தான் எல்லாம் என்று சொல்லுபவர் விபரமில்லாதவர் என்று அர்த்தம்.

முடிவெடுப்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சுயமாக சிந்திக்கும் திறமை வளர்வதற்கு மேலதிகாரிகள் ஒரு கிரியா ஊக்கியா செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படுவர் தான் ஒரு சிறந்த நிர்வாகி. இன்றைக்குப் பல இடங்களில் நிலைமை இப்படியில்லை. அதனால் தான் எந்த அலுவலகத்தில் போய் எந்த ஒரு சின்ன விபரம் கேட்டாலும்" எனக்குத் தெரியாது. மேலேயுள்ள அதிகாரியைப் போய்ப்பார்'' என்று கையைக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு அலுவலகத்தில்... ஒரு கிளார்க் வந்து தன்னுடைய நாற்காலியில் உட்கார்ந்தார். நிமிர்ந்து பார்த்தார்.

எதிரிலுள்ள மேசையில் ஒருதேள் இருந்தது. உற்றுப் பார்த்தார்.

உடனே ஒரு தடியை எடுத்து அடிக்க வேண்டியது தானே... அவரோ அடிக்காமல் கடிகாரத்தைப் பார்த்தார்.

"ஏங்க? தேளை அடிக்க வேண்டியது தானே?'' என்றேன்.

"பத்துமணிக்கு மனேஜர் வந்துவிடுவார். அவரிடம் அனுமதி கேட்டுவிட்டு இந்த தேளை அடிக்கலாம் என்று பார்க்கிறேன்'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### தமிழ் மொழி மூலமான

# இளைஞர் விருது வழங்கல் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தினால் தமிழ் மொழி மூலமான இளைஞர் விருது வழங்கல் போட்டி -2010 நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் நாவல் , கட்டுரை, சிறுகதை, கவிதை, பாடல் இயற்றுதல், சாஸ்திரிய சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், மேளதாளம், நாட்டார் பாடல்கள் (தனி), சித்திரம், புகைப்படம், மௌன நடிப்பு, சிற்பம், அறிவிப்பாளர், இளம்பாடகர், நடனம் (கதகளி), பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் புதிய படைப்புக்கள் ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

இதில் நாவல் குறைந்தது 25 ஆயிரம் சொற்களை கொண்டதாகவும் சிறுகதை 1250-1500 சொற்களுக்கு இடைப்பட்டதாகவும், கவிதை 50-60 வரிகளுக்கிடையே அல்லது 15-20 வரிகளுக்கு உட்பட்டதாகவும் கட்டுரை 750-1500 சொற்களுக்கு இடைப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அத்துடன் இதற்கான தலைப்புக்கள் விரும்பியபடி அமைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பாடல் இயற்றுதல் போட்டிக்கு எந்தவொரு தலையங்கத்தின் கீழும் பாடல் இயற்றி சமர்ப்பிக்கலாம் எனவும் சிறுகதை, நாவல், பாடல் இயற்றுதல்,கவிதை படைப்புக்களின் 3 பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சாஸ்திரிய சங்கீதத்திற்கு தபேலா, புல்லாங்குழல், கிற்றார், வயலின் , மிருதங்கம், தவில், எக்ஸ்ராஜ் ஆகியவற்றையும் மேலைத்தேய சங்கீதத்திற்கு கிற்றார், ஓகன், டிரம்ஸ், செக்ஸ்போன், எகோடியன் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம்.

இவற்றை வாசிப்பதற்கு 5-7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. மேளதாளத்தில் கீழ்நாட்டு தவில் பயன்படுத்தலாம். நாட்டார் பாடல்கள்(தனி) ஆகக் கூடியது 6 நிமிடங்கள் கொண்டதாக அமைய வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் சித்திரம் வெளியீட்டுச் சித்திரம், சம்பிரதாயச்சித்திரம் மற்றும் கிரபிக் போன்ற பிரிவுகளில் எண்ணெய்சாயம், நீர்ச்சாயம் அல்லது கலப்புச்சாயம் பயன்படுத்தலாம் எனவும் அளவு 17X24 ஆக இருப்பதுடன் கண்ணாடி போடாது பிரேம் செய்து கையளிக்கப்பட வேண்டும்.

சிற்பம்(சிலைகள்) மரம், உலோகம் அல்லது சுடப்பட்ட மண் (டெராகொட்டா) போன்ற மூலப் பொருட்களில் விரும்பிய வடிவங்களில் புகைப்படப் போட்டி கறுப்பு , வெள்ளை அல்லது வர்ணம் ஆகிய இரண்டு பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. அளவு குறைந்தது 10X12 அங்குலம் கூடியது 16X20 அங்குலம் ஆக இருத்தல் வேண்டும். சித்திரம், சிற்பம், சிலைகள், புகைப்படம் போன்ற போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் படைப்புக்கள் கையளிப்பது தொடர்பில் அறிவிக்கப்படும். மேலும் மௌன நடிப்பு 3-5 நிமிடங்களுக் கிடைப்பட வேண்டும். அறிவிப்பாளர் போட்டி தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும்.இதற்கு விரும்பிய தலைப்புக்களில் 10 நிமிடங்களில் அறிவிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் பாடகர் போட்டியில் பங்கேற்போர் பல்வேறுபட்ட தாளம், மெட்டுக்களில் 3 பாடல்களை தமிழில் பாட வேண்டும். இதற்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமிய நடனத்தில் கலப்பு, கும்மி, கோலாட்டம், குழுகரகம், காவடி ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளது. குழுவில் குறைந்தது 6-12 பேர் இருக்கவேண்டும். 5-7 நிமிடங்கள் உள்ளடங்கலாக ஆண், பெண் சம அளவு உள்ளடங்கலாக அமைய வேண்டும்.

பரத நாட்டியம் தனி(பெண்/ஆண்) 10 நிமிடங்களில் அலாரிப்பு ஜதீஸ்வரம் இரண்டு நடனங்கள் முன்வவைக்க வேண்டும். கதகளி தனி (ஆண்/பெண்) பரன் மற்றும் டுக்கடா சார்ந்த தாரணா அல்லது சதுரங்க 10 நிமிடங்களில் அமைய வேண்டும். புதிய நடனம் தமது படைப்புகளுக்கமைய இசைய பயன்படுத்தி புதிதாக பாத்திரம், சந்தர்ப்பம் அல்லது மக்களுடன் பின்னிப் பிணைந்த செயற்பாட்டு ரீதியான ஆக்கம் இப்போட்டியில் எதிர்பார்க்கப்படுகிறது. 10 நிமிடங்களில் அமைய வேண்டும்.

மேலும் இப்போட்டிகளில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அன்று 15 வயதுற்கும் 29 ஆம் வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் எனவும் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இளைஞர்களுக்கான நாடகப் போட்டி, நாடகம், குறுநாடகம் ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளது.

இதில் 15-35 வயதிற்கு இடைப்பட்ட வயதினர் விண்ணப்பிக்க முடியும் எனவும் குறுநாடகம் 15-30 நிமிடங்களுக்குள் அமைவதுடன் நாடகம் 1-2 மணித்தியாலங்களுக்குள் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறுநாடகங்கள் மாவட்ட ரீதியான போட்டியாக நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராகவும் ஏனைய கலைஞர் ஒரு மாவட்டதினூடாக மட்டுமே போட்டியிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் தமது படைப்பின்3 பிரதிகளை மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட இளைஞர்சேவை அலுவலர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு யாழ் மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் தெரிவித்துள்ளார். (6-4)

## இராசி பலன்

*27-02-2010 (மாசி 15, சனிக்கிழமை)*
*சதுர்த்தி பின்னிரவு 1.15 மணிவரை*
*ஆமிலியம் முன்னிரவு 8.02 மணிவரை*
*இராகுகாலம் 9.29-10.59 மணிவரை*
*சுபநேரம் 3.29-4.59 மணிவரை*
*ஊரெழுப்பிள்ளையார் தேர், கீரிமலை முத்துமாரி அம்மை தேர், நபிகள் நாயகம் பிறந்த தினம், நடேசர் அபிசேகம்.*

| | |
|---|---|
| மேடம் | தொழில் முன்னேற்றம், சுப செலவு, தாய்வழி உறவு, புதிய தகவல். |
| இடபம் | உறவினர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பிரயாண சுகம். |
| மிதுனம் | பித்தரோகம், எடுத்த காரியம் தாமதமாகும், அதிக செலவு, விவாதம். |
| கடகம் | போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, தேக நலன். |
| சிங்கம் | பிரயாணம், எடுத்த காரியம் தாமதமாகும், சயனசுகக் குறைவு, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம், தன்னம்பிக்கை, நல்ல வரவேற்பு. |
| துலாம் | செய்தொழில் விருத்தி, ஆரோக்கியநிலை, முயற்சி கைகூடும், பாராட்டு. |
| விருச்சிகம் | ஆன்றோர் உதவி, திடீர் பயணம், முயற்சி கைகூடும், புதிய திட்டம். |
| தனுசு | மரியாதைக் குறைவு, காரியதாமதம், பிரயாணம், போசனசுகம். |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் சேர்க்கை, போசனசுகம், நல்ல செய்தி. |
| கும்பம் | காரிய சித்தி, பாராட்டு, பொருள் சேர்க்கை, தேகநலன். |
| மீனம் | வியாபார நன்மை, பணக் குறைவு, ஆரோக்கியக் குறைவு, வீண்பகை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 100 |
| தக்காளி | 50 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 50 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 70 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 50 |
| கரணைக்கிழங்கு | 25 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 140 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | -- | 200 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 350 |
| போஞ்சி | 50 | 60 | 85 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

# தனுததிலகரத்ன, அசோகதிலகரத்ன ஆகியோரின் வங்கிக் கணக்குகளை முடக்க உத்தரவு

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகாவின் மருமகன் தனுத திலகரத்ன, அவரது தாய் அசோக திலகரத்ன ஆகியோரது வங்கிக் கணக்குகளை கொழும்பு மேல் நீதிமன்றம் முடக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபால் விஜேசுதந்திர இந்த வங்கிக் கணக்கை முடக்கும் உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று மாத காலப் பகுதியில் குறித்த வங்கிக் கணக்குகளுடன் எவ்விதத்திலும் கொடுக்கல், வாங்கலை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் மூன்று மாத காலத்திற்குள் விசாரணைகள் முடிவடையாவிட்டால் வங்கிக் கணக்குகளை ஒரு வருடத்திற்கு முடக்குமாறு மேல் நீதிமன்றத்திடம் கோரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பாடசாலை மாணவிக்கு தண்டனை

## கண்டியில் சம்பவம்

(கொழும்பு)

ஆயுதங்களை வைத்திருந்த பாடசாலை மாணவி ஒருவருக்கு கண்டி நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

கண்டியில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவி ஒருவர் கைத் துப்பாக்கி, கைக்குண்டு போன்ற ஆயுதங்களை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

கண்டி மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் வைத்து கடந்த 2003 ஆம் ஆண்டு பொலிஸார் குறித்த பாடசாலை மாணவியை கைது செய்திருந்தனர்.

அதிகாரி பத்திரனகே சுதேஸ் பிரியதர்சினி என்ற மாணவியே இவ்வாறு ஆயுதங்களை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவிக்கு இரண்டு ஆண்டு கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் 42 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (2-6)

# புதிய தேர்தல் சின்னங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன

(கொழும்பு)

இருபது புதிய தேர்தல் சின்னங்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படவுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 44 சுயேட்சைக் குழுக்கள் தேர்தலுக்காகக் கட்டுப் பணம் செலுத்தியதால் புதிய தேர்தல் சின்னங்களை அறிமுகப்படுத்த நேர்ந்ததாகப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறினார்.

இதற்கு முன்னர் தேர்தல்கள் செயலகத்தில் 40 சின்னங்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததாகவும் இதனால் ஏற்பட்ட சிக்கலைத் தீர்த்துவைக்க 20 புதிய தேர்தல் சின்னங்கள் நேற்றுமுன்தினம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கான கால அவகாசம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது.

எக்காரணங் கொண்டும் இக்கால எல்லை நீக்கப்படமாட்டாதெனத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. (2-6)

# இடம்பெயர்ந்த மக்களை விடுவிப்பதற்கு பொன்சேகா முட்டுக்கட்டையாக திகழ்ந்தார்

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களை விடுதலைசெய்யும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா முட்டுக்கட்டையாக திகழ்ந்தார் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முகாம்களில் தங்கியிருந்த ஆயிரக்கணக்கானோரை நாம் விடுதலை செய்தபோதிலும் அவர்களை மீண்டும் முகாம்களில் தடுத்துவைக்குமாறு ஜெனரல் பொன்சேகா உத்தரவிட்டதாக இந்தியாவின் பிரபல ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட ஏனைய உலக நாடுகள் இடம்பெயர் மக்களை விடுதலை செய்ய வேண்டுமென அழுத்தம் கொடுத்த போதிலும், பாதுகாப்புக் குறித்து பொன்சேகா தர்க்கம் செய்து வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிட்ட அவர், குறித்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் தப்பிச் சென்ற போது சரத் பொன்சேகா உரிய பாதுகாப்பை வழங்குவதனை விடுத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வாதம் செய்து வந்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையீடு செய்து இந்த விவகாரத்திற்கு தீர்வு வழங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# பொலிஸாரின் நன்மதிப்பை உயர்த்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

## நீதவான் சம்பா ஜானகி ராஜரட்ண

பொலிஸாரின் நன்மதிப்பை உயர்த்தக் கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென நீதவான் சம்பா ஜானகி ராஜரட்ன பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் சேவைகள் தொடர்பிலான மக்கள் நன்மதிப்பு வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதென சுட்டிக்காட்டிய அவர் அநேகமான வழக்கு விசாரணைகளின் போது பொலிஸார் நீதிமன்றத்திற்கு சரியான ஒத்துழைப்பை வழங்கத் தவறி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதில் சிக்கல் நிலையை உருவாக்கியுள்ளதெனவும் பொலிஸார் கவனயீனமான முறையில் செயற்படும் பல்வேறு சந்தர்ப்பங்கள் தொடர்பில் நீதிமன்றங்கள் வலியுறுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வழக்கு விசாரணை ஒன்று தொடர்பில் சரியான தகவல்களை பொலிஸார் வழங்காத காரணத்தினாலேயே நீதவான் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# பாதுகாப்பான அடையாள அட்டை விரைவில் விநியோகிக்கப்படவுள்ளது

## ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பான தேசிய அடையாள அட்டைகளை இந்த வருடத்திலிருந்து விநியோகிக்க எண்ணியுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவிக்கிறது. ஆறுமாத காலத்துள் இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.ஜீ.தர்மதாஸ தெரிவிக்கிறார்.

இதன்படி இவ்வருட இறுதிக்குள் புதிய தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியுமெனவும் இதற்கமைய புதிதாக விநியோகிக்கப்படவுள்ள தேசிய அடையாள அட்டையின் நம்பகத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு சில விசேட பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கவுள்ளதாகவும் ஆட்பதிவு ஆணையாளர் கூறியுள்ளார்.

இதற்கமைய தேசிய அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம் மற்றும் புதிய பாதுகாப்புக் குறியீடுகள் உள்ளடக்கப்படுமென ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு அடையாள அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தற்காலிக அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருப்பதால் இம்முறை பொதுத் தேர்தலுக்கென ஆட்பதிவுத் திணைக்களத்தால் தற்காலிக அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படமாட்டாதென ஆணையாளர் கூறினார். (2-6)


# இந்தோனேசியாவில் இலங்கை அகதிகள் உண்ணாநிலைப் போராட்டம்

இந்தோனேசியாவில் அகதி முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் உட்பட சிலர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஓசியானிக் கப்பலிருந்து வெளியேறியவர்களுக்கு பல்வேறு நாடுகளில் அனுமதி வழங்கப்பட்டதைப் போன்று தமக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று அவர்கள் கூறி வருகின்றனர்.

இந்தோனேசியாவின் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 இலங்கையர்களும் 8 ஆப்கானிஸ்தான்களும் இவ் உண்ணா விரதத்தை மேற்கொண்டு வருகின்றனர். இலங்கை அகதிகள் 10 பேரும் உண்மையான அகதிகள் என நிரூபிக்கப்பட்டதன் பின்னரும் சுமார் 1 வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்ப டுகின்றது. உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் சிலரின் உடல்கள் கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.(2-9)





நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலை சிரேஷ்ட வேலைப் பரிசோதகர் ர.இரவீந்திதாஸ் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பதையும், பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தொழிலதிபர் வே.சிவனேஸ்வரன், பழைய மாணவர் பொ.செல்வராசா ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், அதிபர் சி.தர்மரட்ணம் தலைமையுரையாற்றுவதையும். விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:-பரராசசிங்கம்)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 19



செல்வச் செருக்கில் மன்னனுக்கு நிகரானவனும் இராசமுத்திரைகள் பெற்ற ஒப்பற்ற வீரனும் கச்சூர் நாட்டவனுமாகிய நீலகண்டனையும் அவனுடைய தம்பிமார் நால்வரையும் அரசன் பச்சி லைப்பள்ளியில் இருக்கச் செய்தான். கல்வியறிவிலும் சான்றோர் இணக்கத்திலும் சிறந்தவனாக கனகமழவன் புலோலியைப் பெற்றான். புலவரைப் பேணும் பெருஞ் செல்வனான சுவபக நாடாழ்வான் சுவபகாரேந்திரனையும் நரங்குதேவனையும் தொல்புரத்தில் இருக்குமாறு மன்னன் பணித்தான். பெருவீரனாகிய புல்லூர்த் தலைவன் தேவரா சேந்திரனைக் கோவிலாக் கண்டியில் வாழச்செய்தான். தொண்டை நாடன் மண்ணாடு கொண்ட முதலி இருபாலையைப் பெற்றான். மேலேவரும் கைலாயமாலைப் பகுதி யாழ்ப்பாணத்தில் சிங்கையாரியன் ஆட்சியில் நடைபெற்ற குடியேற்றத்தைக் குறிக்கின்றதென மயில்வாகனப் புலவர் கருதினார். எனவே, மேல்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

சிங்கையாரிய மகாராசன் தமிழ்க் குடிகளை அவ்விடம் அனுப்பிவைக்க வேண்டுமென்று தமிழ்நாட்டரசர்களுக்குத் திருமுகங்கள் எழுதியனுப்பினான். அவ்வரசர்கள் சில குடிகளை அனுப்பிவைக்க, அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுள் ஐந்து குடிமனைகளுடனேயும் வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமழவனையும் தம்பியையும், மைத்துனனாகிய செண்பகமழவனையும், சிங்கையாரிய மகாராசன் திருநெல்வேலியிற் குடியிருத்தினான்....

சிங்கையாரியரின் வேண்டுகோளினாலே தமிழ்நாட்டரசர் தமிழ்க்குடிகளை அனுப்பிவைத்தனர் என்பது ஆதாரமற்ற கூற்றாகும். கைலாயமாலை அவ்வாறு கூறவில்லை.

சிங்கையாரியன் வடஇலங்கையில் ஆதிக்கஞ் செலுத்திய காலத்திலே தென்னகத்திலிருந்து பல தமிழ்க் குடிகள் அங்கு வந்திருப்பர். ஆயினும், ஈழத்தின் வட பகுதியில் ஏற்பட்ட தமிழர் குடியேற்றத்தின் பிரதான கட்டத்தையே கைலாயமாலை குறிப்பிடுகின்றதென்றும் கொள்ள முடியாது. தென்னகத்திற்கும் ஈழத்திற்குமிடையில் பல நூற்றாண்டுகளாக நிலவிய தொடர்பின் விளைவாகவே ஈழத்த மிழகம் உருவாகியது. தென்னாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்த வணிகர், சிங்கள மன்னரின் அழைப்பில் வந்த தென்னாட்டு போர்வீரர், முத்துக்குளிக்க வந்த பரதவர் முதலிய மீனவர், தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த போர்வீரர் முதலியோரின் பிற் சந்ததியினரே ஈழத்தமிழ்க்குடிகள். இத்தரப்பினருள் ஒரு பிரிவினரைப் பற்றியே அதுவும் ஒரு சில பிரதானிகளைப் பற்றியே கைலாயமாலை குறிப்பிடுகின்றது.

சிங்கையாரியன் காலத்துப் பிரதானிகளைப் பற்றித் தமிழ்நூல்கள் சொல்வனவற்றைக் குறித்து இராசநாயகம் மேல்வருமாறு கூறுகின்றார்.

வேளாளர் குடியேற்றத்தைக் கைலாயமாலையிற் கண்டபடி மயில்வாகனப் புலவர் பெயர்த்தெழுதிவிட்டார். கிழக்கே காஞ்சிமுதல் மேற்கே வஞ்சி பரியந்தம் தென்னிந்தியாவிலுள்ள வேறு வேறான மண்டலங்களில் வசித்த கண்ணியமும் செல்வாக்குமுள்ள பிரபுக்களை ஓர் அரசன் ஊரூராகத் திரிந்து ஒருங்கு சேர்த்தான்

## கைலாயமாலை

என்பது அவர்களும் அவன் வேண்டுகோட்கிணங்கி குடிமுதற் சுற்றமுங் குற்றிளையோடும் அடியோர் பாங்கும் ஆயமுஞ் சேர்ந்து தத்தம் ஜன்ம தேசத்திலுள்ள காணிபூமிகளை விட்டு வேற்று நாடடைய மனம் ஒருப்பட்டார் என்பதும் அசம்பாவிதம், கொடிய பஞ்சம் ஏற்பட்டிருப்பினும் அவர்கள் அவ்வாறு புலம் பெயர்ந்து சென்றிருக்க முடி யாது. தமக்கும் தம் பெண்களுக்கும் ஏற்பட்ட அவமானம், வர்ணச் சீர்கேடு முதலிய இன்னல்களின் காரணமாகச் சொந்த நாட்டையும் முன்னோர் களிடமிருந்தும் பெற்ற வளமான நிலங்களையும் விட்டு அப் பிரதானிகள் பிறநாட்டுக்குச் சென்றிருக்கவேண்டும். அவ்வாறான சூழ்நிலை 13 14 ஆம் நூற்றாண்டுகளில் சோழ பாண்டிய அரசுகள் அழிவுற்று மாலிக் கபூர் முதலிய முகமதியரும் பின் கொய்சளரும் விசயநகர மன்னரும் தென்னாட்டைத் தாக்கிய காலங்களிலும் பின் விஸ்வநாத நாயக்க[illegible] தருகை மதுரை முதலிய இடங்களிலே தெலுங்குப் பாளிகர் களைப் பாளையக்காரராக நிறுத்திய நாட்களிலும் நிலவியது. இந் நாட்களில் வேளாளர் குடும்பங்கள் பல ஈழத்திற்குச் சென்றிருக்க வேண்டும்.

தென்னகத்திலே தமக்கேற்பட்ட இன்னல்களின் காரணமாகவே கைலாய மாலையிலே கூறப்பெற்ற பிரதானிகள் யாழ்ப்பாணம் வந்தனரென்ற கருத்துத் தவறானதாகும். முதலியார் இராசநாயகம் சொல்வதை ஏற்றுக்கொள்வோமாயின் பதினான்காம் நூற்றாண்டின் முன்னர் தமிழகத்திலிருந்து தமிழ்க்குடிகள் ஈழத்திற்கு வந்திருக்கவில்லையென்றே கொள்ள வேண்டும். இக் கருத்தை முதலியாரே ஒப்புக் கொண்டிருக்கமாட்டார். படையெடுப்புக்கள் நடைபெற்ற காலங்களிலே தமிழ் நாட்டிலிருந்த பிரதானிகள் பலர் ஈழம் வந்திருப்பர். பதின்மூன்றாம் நூற்றாண்டிற் பாண்டியர் நான்கு தடவை படையெடுத்து வந்தனர். சடாவர்மன் சுந்தர பாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டளவில் (1258) ஈழத்திலுள்ள மன்னனொருவனை அடக்கி அவனிடமிருந்து "துலங்கொளி மணியும் குழிவேளமும்", திறமையாகப் பெற்றனர். பின் 1263 ஆம் ஆண்டளவிலே சடாவர்மனின் துணையரசனான வீர பாண்டியன் ஈழம் மீது படையெடுத்துவந்து வட இலங்கையிலுள்ள சாவகமன்னனைப் போரிலே கொன்றுவிட்டு அரசாட்சியைச் சாவகனுடைய மகனுக்களித்துவிட்டுச் சென்றான். மாறவர்மன் குலசேகர தேவரின் ஆட்சியின் (1268–1310) முற்பகுதியிற் சோழகங்கன், காலிங்கராயன் என்றவிரு தமிழ்ப்பிரதானிகள் ஈழம் மீது படையெடுத்துவந்தனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஏற்பட்ட பாண்டியப் படையெடுப்புக்களின் விளைவாக வட இலங்கையிலே அமைந்திருந்த அரசிலே பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பாடாகியது. முடியில் முன்கண்டவாறு ஒரு பாண்டிநாட்டுப் பிரதானி – ஆரியச்சக்கரவர்த்தி – அரசாட்சியையுங் கைப்பற்றிக் கொண்டான். பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், ஆரியச்சக்கரவர்த்திகள் ஆளத் தொடங்கிய காலத்திலும் பாண்டிநாட்டுப் பிரதானிகள் பலர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தனர் என்பதற்கு அங்குள்ள இடப் பெயர்வுகளே சான்றாயுள்ளன.

முதலாம் ஆரியச்சக்கரவர்த்தியின்




ஆட்சியில் அதிகாரம் பெற்ற ஒருபுதிய வர்க்கத்தைச் சேர்ந்த சிலரையே கைலாய மாலை குறிப்பிடுகின்றது. முடியாட்சிக் காலத்தில் புதிய அரச மரபுகள் அதிகாரம் பெறுமிடத்து குறிப்பாக அயல்நாட்டுப் படைப்புக்களின் விளைவாக அரசியல் மாற்றம் ஏற்படும்பொழுது புதிய அதிகார வர்க்கங்கள் தோன்றுவது வழக்கம். ஆரியச்சக்கரவர்த்தியின் ஆட்சி ஏற்பாடாகிய நாட்களில் யாழ்ப்பாண நாட்டிலும் இவ்வாறான ஒருமாற்றம் நடைபெற்றது.

பாண்டியப் படைகளுடன் வந்த பிரதானிகள் பலர் வட இலங்கை நிர்வா கத்தில் உயர் பதவிகளைப் பெற்றனர். உடையார், முதலியார் முதலிய பதவிக ளையும் பிரதேச அடிப்படையில் நிர்வாகப் பொறுப்புக்களையும் வழங்கியதனாலே சிங்கையாரியன் வெவ்வேறு பிரதானி களையும் வெவ்வேறூர்களிற் சென்று வசிக்குமாறு அனுப்பியிருக்கவேண்டும். மேல்வரும் கைலாயமாலைப் பகுதி இக்கருத்தினை வலியுறுத்தும்.

........................இருகுலமுந்துய்ய
தனிநாயகனெனும் பேர்தாங்கு –மினயவனை
மற்றுமுள பற்று நகர்வளம் சூழ்ந்திடு தென்
பற்று நெடுந்தீவு பரிக்கவைத்துச் –சுற்றுபுகழ்
வில்லவன் றன் வஞ்சி நகருறை வெள்ளாமரசன்
பல்லவனோ டிரண்டு பார்த்திவரை – நல்விளைவு
காவுங் கழனிகளுஞ் சாற்றும் பலவளமு
மேவு வெளிநாட்டில் விளங்கவைத்துப் –பூவில்
தலையாரி சேவகரிற் றக்கவர் கடம்மை
நிலையாக நாட்ட நினைத்துச் சிலை தரித்த
வல்லிய மாதாக்கனெனும் மாசூர வீரியனைச்
சொல்லிய மேற் பற்றுத் துலங்கவைத்து –நல்ல
இமையாண மாதாக்கனெனு மிகலோனை
அமைவாய் வடபற்றிலாக்கி – இமயமறி
செண்பக மாதாக்கனெனுஞ் சீர்விறலோன்
றன்னையிரு
கண்போலக் கீழ்ப்பற்றைக் காக்கவைத்து –
ஒண்பயிலும்
வெற்றிமாதாக்கனெனும் வெய்ய திறலோனைத்
தன்றிருச்சேனைக்குத் தலைமைசெய்து –
துன்றிவரும்
ஆனை குதிரை யமருமிடங் கடல்போற்
சேனைமனிதர் செறியிடமோடான வெல்லாம்
அங்கங்கே சேர்வித்து ....

செய்யூரால் வந்த இருபரபுந்துய்ய தனி நாயகனைத் தென்பற்று எனும் நெடுந்தீவினை ஆளச் செய்து விட்டுச் சிங்கையாரியன் காஞ்சிநகரால் வந்த பல்லவனுக்கு வெளிநாட்டைக் கொடுத்தான். தலையாரி முதலிய தலைவர்களையும் நியமிக்க நினைத்து வல்லியமாதாக்கன், இமையாண மாதாக்கன் என்பபோரை முறையே மேல்பற்று, வடபற்று என்பவற்றிற்கு அதிபர்களாக நியமித்தான். செண்பக மாதாக்கன் கீழ்ப்பற்றைப் பெற்றான். வெற்றிமாதாக்கன் சேனாதிபதியானான்.

### கைலாயநாதர் கோயில்

முதலாம் சிங்கையாரியன் தன் வழிபாட்டுத் தேவைகளுக்காகத் தலைநகரிலே கைலாயநாதர் கோயில் என வழங்கிய ஆலயத்தை அமைத்தான். முத்துராச கவிராசர் எழுதிய நூல் கைலாயநாதர் கோயிலைப் பற்றியதால் அது கைலாயமாலை என்ற பெயரைப் பெற்றது. அக்கோயிலின் அமைப்பினைப் பற்றியும் அதன் வனப்பினைப்பற்றியும் முத்துராசகவிராசர் இலக்கிய நயம் பொருந்திய முறையிலே மிகைபட வர்ணித்துள்ளார்.

பேராசிரியர்
சி.பத்மநாதன்

கைலாயநாதருக்கும் உமையவளுக்குமென இரு வேறான உயர்ந்த பெருங் கோயில்களையும் அவற்றோடு மூன்று சபைகள், பரிவார தேவர்களுக்கான மாடங்கள், தேரோடும் வீதி, மடம், அன்ன சத்திரம் முதலியவற்றையும் மிகச் சிறந்த முறையிலே சிங்கையாரியன் அமைப்பித்தான் என்று சொல்லப்படுகின்றது. போர்த்துக்கேயரின் ஆட்சியில் இக் கோயில் அழிக்கப்பட்டதால் கைலாய நாதர் கோயிலின் அமைப்பினைப் பற்றியும் அதன் சிறப்பியல்புகளைப் பற்றியும் தக்கவாறு அறிந்து கொள்ளமுடியாது. (தொடரும்)

"ஈழத்து இலக்கியமும் வரலாறும்" வரலாற்றுஆய்வுத் தொடரில் நாளை யாழ்ப்பாண வைபவமாலை ஆய்வுக் கட்டுரை இடம்பெறும்.

# அனைத்துலக நாணயநிதியக் குழு அம்பாந்தோட்டைக்கு விஜயம்

அனைத்துலக நாணய நிதியத்தின் சிறப்புக்குழு ஒன்று அதன் தலைவர் பிரைன் ஐற்கென் தலைமையில் அண்மையில் அம்பாந்தோட்டை பகுதிக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளின் முதலாவது கட்டம் இந்த வருட இறுதியில் நிறைவுபெறுகின்றது. அதன் மொத்த செலவு 360 மில்லியன் டொலர்களாகும்.

அங்கு 74 மில்லியன் டொலர்கள் செலவில்14 எண்ணெய்க்குதங்களும் அமைக்கப்பட்டு வருகின்றது. அவற்றில் 8 நிலத்துக்கு அடியிலான எரிபொருள் சேமிப்பு தாங்கிகளையும், 3 விமான எரிபொருள் சேமிப்பு குதங்களையும், 3 திரவ வாயு எரிபொருள் தாங்கிகளையும் கொண்டது. அவை மொத்தமாக 80 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருட்களை சேமிக்கும் தன்மை கொண்டவை.

இந்த அபிவிருத்திக்கான நிதி உதவிகள் சீன அரசினால் வழங்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு ஜனாதிபதி சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை தொடர்ந்து சீனா இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. மேலும் 17 மீற்றர் ஆழமான கடற்பகுதியில் 600 மீற்றர் நீளமாக பொருட்களை இறக்கும் தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகம் இயங்க ஆரம்பித்ததும் போக்குவரத்து கப்பல்கள் தமது பயணத்தில் 3 நாட்களை சேமிக்க முடியும். அம்பாந்தோட்டைப் பகுதியில் எரிபொருள் நிரப்பவும், உணவு மற்றும் மருந்து தேவைகளுக் காகவும், திருத்தப் பணிகளுக்காகவும் 4 ஆயிரத்து 500 எண்ணெய் தாங்கி கப்பல்கள் வந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2-6)

# குடிபோதையில் தாக்குதல் குடும்பஸ்தர் பலியானார்

## திவுலப்பிட்டியவில் சம்பவம்

(கொழும்பு)

இரும்புப்பொல்லால் தாக்கி 42 வயது குடும்பஸ்தர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை சிவிலப்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மின்னேரிய – சமகிபுரி பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். குருநாகல் வேஹர – நிஸங்கமாவத்தையைச் சேர்ந்த நபரே சம்பவத்தில் கொலைசெய்யப்பட்டவராவார்.

இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

சந்தேக நபரும் கொலை செய்யப்பட்டவரும் தும்புத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்பவர்களாவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இருவரும் ஒன்றாக மது அருந்தியுள்ளனர். சந்தேக நபர் முதலில் தொழிற்சாலைக்கு வந்துள்ளார். பின்னர் கொலைசெய்யப்பட்டவர் வந்துள்ளார். ஒன்றாக மது அருந்தினால் ஒன்றாகவே வந்திருக்க வேண்டும் என்று இருவரும் வாய்த்தர்க்கம் புரிந்துள்ளதைத் தொடர்ந்து இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்டவிசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. (2-6)


# இந்தியா - பாகிஸ்தான் நேரடி பேச்சுவார்த்தை
# லஷ்கர் தீவிரவாதிகளை ஒப்படைக்க கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியா -பாகிஸ்தான் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் நடந்தது. அப்போது " மும்பை தாக்குதலுக்கு மூல காரணமான லஷ்கர் -இ-தொய்பா பயங்கரவாதி ஹபீஸ் சயீது உட்பட பயங்கரவாதிகள் பலரைப் பிடித்து ஒப்படைக்க வேண்டும் என இந்திய அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் பயங்கரவாதிகள் தொடர்பான இரண்டு ஆவணத் தொகுப்புகளும் பாக். அதிகாரிகளிடம் வழங்கப்பட்டன.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவ. 26 ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலால், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை தடைப்பட்டது. மும்பை தாக்குதலுக்கு காரணமான பயங்கரவாதிகளுக்கு எதிராக, கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பேச்சுவார்த்தை தொடரும் என்றும் இந்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், பாகிஸ்தான் அரசு தரப்பில் விடுவிக்கப்பட்ட தொடர் வேண்டுகோளை அடுத்து, இரு நாட்டு வெளியுறவு செயலர்களும் பேச்சுவார்த்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 15 மாத இடைவெளிக்குப் பின், இந்திய வெளியுறவு செயலர் நிருபமாராவும், பாகிஸ்தான் வெளியுறவு செயலர் சல்மான் பஷீரும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.



டில்லியில் உள்ள ஐதராபாத் ஹவுசில் காலை 11 மணிக்கு தொடங்கி 90 நிமிடங்கள் வரை நீடித்தது. இந்த பேச்சுவார்த்தையில் மும்பை தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில், போதிய அக்கறை காட்டவில்லை என, பாகிஸ்தான் அரசு மீது குற்றம் சாட்டிய இந்திய அதிகாரிகள், பயங் கரவாதிகள் தொடர்பான இரண்டு ஆவணத் தொகுப்புக்களையும் பாக். அதிகாரிகளிடம் சமர்ப்பித்தனர். மேலும் அல்-குவைத்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய இலியாஸ் காஷ்மீரி என்ற பயங்கரவாதியையும் பிடித்துத்தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கிடையில், இந்தியா-பாகிஸ்தான் இடையேயயான பேச்சுவார்த்தைகள் தொடங்கியதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. பரஸ்பரம் இருநாட்டு நலன் கருதி, இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடரவேண்டும் என்றும் கூறியுள்ளது.

பேச்சுவார்த்தைக்குபின், பாகிஸ்தான் குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனை சந்தித்துப் பேசினர். (2-6)

## தாய்மொழியில் பேசிய மாணவிக்கு தண்டனை

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் உள்ள ஒரு ஆங்கில பாடசாலையில் மூன்றாம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர், வகுப்பில் அருகில் இருந்த மாணவிகளிடம் தெலுங்கில் பேசினார். இதனால், பாடம் நடத்திக்கொண்டிருந்த ஆங்கில ஆசிரியை அந்த மாணவியை மேல் சட்டையைக் கழற்ற வைத்து ஒரு மணி நேரம் மேசை மீது நிற்க செய்து தண்டனை வழங்கினார்.

பின்னர் வீட்டுக்கு சென்ற மாணவி நடந்த சம்பவம் பற்றி தனது பெற்றோரிடம் கூறவே. அவர்கள் இதுபற்றி பள்ளிக்கூட நிர்வாகத்திடம் புகார் செய்தனர். மேலும் இதுகுறித்து தகவல் அறிந்த பெண்கள் மற்றும் மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்களும், அந்த ஆசிரியை மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதைத் தொடர்ந்து பள்ளிநிர்வாகம் அந்த ஆசிரியை இடைநிறுத்தம்செய்தது. இந்த சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்படும் என ஆந்திர மாநில கல்வித்துறை அமைச்சர் டி.மாணிக்க வரப்பிரசாத் தெரிவித்தார். (2-6)

## தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி விரைவில் அமையும்
### தளவாய்சுந்தரம் தெரிவிப்பு

தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி விரைவில் அமையும் என்று அ.தி.மு.க.அமைப்புச் செயலர் என். தளவாய் சுந்தரம் தெரிவித்தார்.

நாகர்கோவிலில் புதன்கிழமை இரவு நடைபெற்ற ஜெயலலிதா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் பல்வேறு நல உதவி களை வழங்கி அவர் பேசியதாவது, தி.மு.க ஆட்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வித ஆக்கபூர்வமான பணிகளும் நடை பெறவில்லை. உலக்கை அருவி திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், துறைமுகப் பணிகள் எல்லாம் என்ன ஆனது. தேர்தலை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். விரைவில் ஜெயலலிதா தலைமையில் தமிழகத்தில் ஆட்சி மலரும் என்றார் அவர்.

நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் பேரூராட்சிப் பகுதியில் அ.தி.மு.க சார்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஜெயலலிதா பிறந்த நாள் விழாவில் ஏழைகளுக்கும் , மாணவர்களுக்கும் பல்வேறு நலஉதவிகளை தளவாய்சுதந்தரம் வழங்கினார். (2-6)

## பாரதச் செய்திகள்

# தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு நிரந்தரமான வீடுகள் கிடைக்குமா ?

(திருநெல்வேலி)

தமிழ்நாட்டில் வசித்துவரும் இலங்கை அகதிகளுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை அமைப்பதற்கான நிலம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால், அரசின் திட்டம் நிறைவேறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

முகாம்கள் இருக்கும் இடங்களுக்கு அருகில் தேவையான அளவு நிலம் இல்லாததால், அகதிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க முன்வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவையைக் கூடப்பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 113 அகதி முகாம்களில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். அகதிமுகாம்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளதாகக் கூறமுடியாது. அகதி முகாம்களின் இந்த பரிதாப நிலையை உணர்ந்த அரசு, அவற்றைச் சீரமைக்க திட்டமிட்டது.

அதற்காக, கடந்த ஆண்டு அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் நேரில் சென்று முகாம்களைப் பார்வையிட்டு அளித்த அறிக்கையின் அடிப்படையில், முதல் கட்டமாக கடந்த ஆண்டு ரூ.100 கோடியை அரசு ஒதுக்கீடு செய்தது. அந்த நிதியில் தற்போது அனைத்து முகாம்களிலும் ரூ.46 கோடி செலவில் குடிநீர், மின்வசதி, தெருவிளக்கு, கழிவறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எஞ்சியுள்ள ரூ.54 கோடியில் நிரந்தர வீடுகளை கட்டிக்கொடுக்க அரசு திட்டமிட்டு அதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. அரசின் இத் திட்டத்தை நிறைவேற்றுவதில்தான் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 10 முகாம்களில் 870 குடும்பங்களைச் சேர்ந்த 2,990 பேர் வசித்துவருகின்றனர். இவர்களில் நாரணம்மாள்புரம் முகாமைச் சேர்ந்த 225 குடும்பங்களில் மோசமான வசிப்பிடங்களில் இருந்த 96 குடும்பங்களுக்கு கங்கைகொண்டானில் அரசு வழங்கிய நிலத்தில் திருநெல்வேலி சமூகசேவை சங்கத்தின் (டி.எஸ்.எஸ்.எஸ்) அமெரிக்க நாட்டு நிறுவனத்தின் நிதியுதவியில் வீடுகளைக் கட்டிக் கொடுத்தனர்.

அடுத்து, சங்கரன்கோவில் ஆத்தியடி குளத்துக்கரை முகாமில் மோசமான சூழ்நிலையில் வசித்துவரும் 60 குடும்பங்களுக்கு அந்தப் பகுதியில் வீடு கட்டிக்கொடுக்க முயற்சி மேற்கொண்டபோது அங்கு நிலம் கிடைக்கவில்லை. பெருமாள்புரம் (சிறைத் துறை நிலம்), சங்கரன்கோவில் ஆர்.எம்.சி. (ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்) . சமூக ரெங்கபுரம் (ஆசிரிய பயிற்சி நிறுவனம்) . சுப்பிரமணியபுரம் (மேய்ச்சல் புறம்போக்கு) முகாம்களின் நிலையும் இதுதான். இந்த முகாம்களை தற்போது இருக்கும் இடங்கள் அரசுத் துறைகளுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அந்த இடத்தில் நிரந்தர வீடுகளை கட்டிக் கொடுக்க சம்பந்தப்பட்ட துறைகள் அனுமதி அளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும் தற்போதுள்ள முகாம்களில் வசிப்பவர்களுக்கான நிரந்தர வீடுகளை அந்தந்த முகாம்களுக்கு அருகிலேயே கட்டிக்கொடுக்க வேண்டும் என்பதுதான் முகாம்களின் கோரிக்கை. இத்தனை நாளைய பழக்க வழக்கம், வேலைவாய்ப்பு, போக்குவரத்து வசதி உள்ளிட்ட காரணங்களால் முகாம்களில் யாரும் அடுத்த இடங்களுக்குச் செல்ல தயாரில்லை. நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு நிலம் இல்லை.

தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்தவர்கள் உடனடியாக ஆங்காங்கே இருக்கும் அரசு கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இப்போது அவர்களுக்கு நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமானாலும், ஒரே இடத்தில் குறைந்தபட்சம் 50 வீடுகளை கட்டினால்கூட 2 ஏக்கர் நிலம் வேண்டும். அப்படி ஒரே இடத்தில் மொத்தமாக இல்லாதது அவர்களுக்கான நிரந்தர வீடு கட்டும் திட்டத்தை கேள்விக்குறியாக்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## கலையுலகினரின் நன்றி தெரிவிக்கும் விழா விளம்பரப்படுத்த எடுக்கப்படவில்லை
### கருணாநிதி விளக்கம்


(சென்னை)

"கலையுலகத்தினர் எடுத்த விழா என்னை விளம்பரப்படுத்த எடுத்த விழா அல்ல" என தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார் அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எனக்கு கலையுலகத்தினர் எடுத்த நன்றி தெரிவிக்கும் விழா, என்னை விளம்பரப் படுத்தவோ, யாரும் தங்களை விளம்பரப் படுத்தவோ எடுக்கப்பட் விழா அல்ல. "எல்லா முதல்வர்களுக்கும்" இப்படித்தான் விழா எடுப்பர்" என வக்கணையோடு சொல்லி எரிச்சலைத் தணித்துக்கொள்வோர் சிலர் உண்டு. அந்த வக்கணையாக இல்லாமல், இந்த விழா பத்தோடு பதினொன்று அல்ல. கலைப் பணியாற்றும் நண்பர்களுக்கு, அவர் தம் குடும்பங்கள் குறைவின்றி வாழ்வதற்கு ,90 ஏக்கர் அரசு நிலத்தை அவர்களுக்கு வழங்கியதற்காக, அவர்கள் காட்டிய நன்றிப்பெருக்கு அந்தவிழா!

அழகான குழந்தையை மேலும் அலங்கரித்து பள்ளிக்கு அனுப்பும்தாய், அதன் கன்னத்தில் ஒரு சிறிய கறுப்பு பொட்டு வைத்து அனுப்புவதைப் பார்க்கிறோமே, அதைப் போன்றதொரு பொட்டு, அந்த விழாவில் வைக்கப்பட்டதைப் பெரிதுபடுத்தி, அந்தப் பொட்டியின் வண்ணத்தை முகம் முழுவதும் பூசிக் கொள்ளும், புரியாத குழந்தையைப் போல ஒரு நிகழ்ச்சி அமைந்துவிட்டது உண்மை தான்.

எல்லோரும் வாழ்த்துரைத்து அள்ளித் தெளித்த அன்பு மலர்களுக்கிடையே, அஜித் எனும் தும்பை மலரும் என் மேல் விழுந்து , அது மாசற்ற மலரெனினும் எனக்கு நடந்த விழா வுக்கு எதி ராக விழு ந்த மலரோ என்ற சந்தேகத்தை எழுப்பி யது. "இது தான் சமயம்" என சிலர், எனக்குநடந்தவிழாவை திசை திருப்பமுயன்றனர்.



இருக்கவே இருக்கின்றனவே சில பத்திரிகைகள், அவை அதைப் பூதாகரமாக உருவாக்க முனைந்தபோது, அதை மேடையேற விடாமல், ஒத்திகையிலேயே ஒரு வழிசெய்து, முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சி யாக, தம்பி அஜித் என்னைச் சந்தித்து விளக்கமளித் தார்.

கடைசியில், பெரிதாக வெடிக்கப் போகிறது என எதிர்பார்த்தவர்களுக்கு புஸ்வாணமாகி விட்ட கதையாயிற்று. தாம் கண்ட கனவு கலைந்ததே என கைபிசைந்து நிற்கின்றனர்.

இனி எவர் ஒருவரும் கலையுலகில் சிறு கலகம் விளைவிக்கவும் முடியாது என கட்டுப்பாடு காப்பார்களேயானால், அது அவர்கள் நடத்திய விழா தந்த மகிழ்ச்சியை விட பெரு மகிழ்ச்சியாக அமையும். இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார். (2-6)



விலைவாசி உயர்வைக் கண்டித்து பாரதிய ஜனதாக் கட்சியினர், உ.பி.மாநிலம் லக்னோவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு திடீரென நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வித முன்னறிவிப்புமின்றி பிள்ளை யானுக்கு வழங்கிய பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டமை தொடர்பாக மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்துப் போட்டியிட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தீர்மானித்ததுடன் முதல் முறையாக வடமாகாணத்திலும் அந்தக் கட்சி போட்டியிடுகிறது.

அதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவநேசதுரை சந்திரகாந்தனின் கட்சியினர் எதிரணிக்கு ஆதரவு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (6)

# சிறுவர் உரிமைகளுக்கான சிவில் சமூக வலையமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணை யுடன் அண்மையில் சொண்ட நிறுவனத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சிறுவர் உரிமைகளுக்கான சிவில் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்பின் தலைவராக சொண்ட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் க.செந்தூரன் மற்றும் செயலாளராக சீ.ஏச்.ஏ. நிறுவன உத்தியோகத்தர் செல்வி லாவண்யா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ் அமைப்பானது எதிர்காலத்தில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் பாடுபடும் எனத் தெரிய வருகின்றது. (2-30)

# தமிழ்மொழித் தின நாட்டுக் கூத்து

(அல்வாய்)

வடமராட்சி வலய தமிழ்மொழி தின நாட்டுக்கூத்து எதிர்வரும் 6 ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் அறிவித்துள்ளார். (4-19)

# கொடுப்பனவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது


(அல்வாய்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கடமைகளில் ஈடுபட்ட மேற்பார்வையாளர்கள், உதவி மேற் பார்வையாளர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதில் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் நேரடியாக கல்வி அமைச்சின் பரீட்சை பிரிவுடன் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-19)

# மக்களை சிரிக்கவைப்பவன் தான் ஆனால் என்னை அழவைக்கிறார்கள்

## சிங்கமுத்துவின் கூற்று தொடர்பில் வடிவேலு



ஈழத் தமிழர்களுக்காக உயிர்நீத்த முத்துக்குமாரின் இரங்கல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வேதனையை வெளிப்படுத்தியிருந்தேன். இது நடிப்பு என்று பின்னர் நான் சொன்னதாக சிங்கமுத்து வார பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

என் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் இந்தப்பேட்டி அமைந்துள்ளது என நடிகர் வடிவேலு தாக்கல் செய்த மனு ஒன்றில் தெரிவித்துள்ளார்.ரூ.7 போடி நில மோசடி குறித்து ஏற்கனவே சக நகைச்சுவை நடிகர் சிங்கமுத்து மீது பொலிஸில் புகார் செய்த வடிவேலு, கடந்த புதன் சைதாப்பேட்டை நீதிமன்றில் ஆஜராகி மனுத்தாக்கல் செய்தார். அதில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அதில் மேலும், நான் கடந்த 20 ஆண்டுகளாக திரைப்படங்களில் நடித்துவருகின்றேன். உலகம் முழுவதும் எனக்கு ரசிகர்கள் உள்ளனர். சிறந்த நகைச்சுவை நடிகருக்கான விருது பெற்றுள்ளேன். எனது சக நடிகரான சிங்கமுத்து வாரப் பத்திரிகை ஒன்றில் பேட்டிகொடுத்திருந்தார். அந்த பேட்டியில் என்னை நரகாசுரன் என்று வர்ணித்திருந்தார்.

எனது உதவியாளர்கள் மரணத்திற்கு நான் தான் காரணம் என்றும் பேட்டியளித்திருந்தார். இதுபற்றி சிங்கமுத்துவுக்கும், வார பத்திரிகைக்கும் கடிதம் அனுப்பி னேன். பத்திரிகை தரப்பில் மன்னிப்பு கோரப்பட்டுள்ளது. ஆனால் சிங்கமுத்து விடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. எனக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சிங்கமுத்து பேட்டி கொடுத்திருக்கிறார். இந்திய தண்டனை சட்டம் 499,500 (அவதூறாக பேசுதல்) ஆகிய பிரி வின் கீழ் அவர் மீது நடவடிக் கை எடுக்க வேண் டும் என்று கூறப்பட்டிருந்தது.

மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி திருமகள், வழக்கை மார்ச் 3ஆம் திகதிக்கு தள்ளி வைத்தார்.

பின்னர் நீதிமன்றிலிருந்து வெளியே வந்த வடிவேலு நிருபர்களுக்கு வேதனையுடன் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறு கையில், தினம் தினம் மக்களை சிரிக்கவைக் கிறவன் நான். ஆனால் என்னை அழ வைக் கிறார்கள். இதனால் சரியாக தொழிலில் ஈடுபட முடியவில்லை. இருந்தாலும் சினிமா வில் கவனமாக நடித்து தொடர்ந்து மக்களை சிரிக்கவைக்கும் பணியில் ஈடுபடுவேன். துரோகிகளுக்கு சட்ட ரீதியாக தண்டனை வாங்கிக் கொடுக்காமல் ஓயமாட்டேன் என்றார். (2-6)

# நந்திக்கொடிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களின் கும்பாபிஷேக வைபவங்கள் மற்றும் வருடாந்த திருவிழாக்கள் என்பவற்றிற்காக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் நந்திக் கொடிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்பும் ஆலய பரிபாலன சபையினர் தலைவர், செயலாளர் ஒப்பமிட்ட கடிதம் மற்றும் கும்பாபிஷேக வருடாந்தத் திருவிழாக்களை உணர்த்தும் விஞ்ஞாபனங்கள் என்பவற்றைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து ஒரு சிறு எண்ணிக்கையிலான நந்திக் கொடிகளை நேரில் பெற்றுக் கொள்ளலாம் என திணைக் களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# சலங்கையின் ஜதிகள் நடன அளிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் "சலங்கையின் ஜதிகள்" நடன அளிக்கைகள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (6-4)

# தொழிற்திறன் கண்காட்சி -2009

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் தொழிற்திறன் கண்காட்சி -2009 இன்று சனிக்கிழமை முற்பகல்10.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துசிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி ந.அ. ஜெயராஜா, பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம், பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உ. சுபலிங்கம், பருத்தித்துறை உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி த.ஜெயராசா, புலோலி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் க.சண்முகராஜா, பரு.இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி உ.வரதீஸ்வரன், புலோலி தெற்கு கிராமஅலுவலர் த.குமரகுருபரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-4-35)


# யாழ் மண்ணில்

BCHS BRITISH COLLEGE OF HIGHER STUDIES

MARIA MONTESSORI இன் புதிய அறிமுகம்

BCHS யாழ் மண்ணில் சிறார்களின் நலன் கருதி



தன்னுடைய இன்னுமொரு பரிமாணத்தினை உருவாக்குகின்றது. இந்த வகையில் சிறார்களுக்கான சர்வதேச தரத்திலான ஆங்கில மொழி மூலம் MONTESSORI யினை உருவாக்கியுள்ளது.

இங்கு மாணவருக்குரிய முழுமையான கற்பித்தல் சர்வதேச தரம் வாய்ந்ததோடு MARIA MONTESSORI முறையினூடாக சிறுவர்கள் பயிற்றுவிக்கப்படுவர். அத்தோடு சிறார்களின் ஆளுமை விருத்திக்குரிய செயற்றிட்டம் உளவியல் ரீதியான செயற்றிட்டம் போன்றவற்றினூடாக சிறுவர்களினை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதே எமது நோக்கம்.

## ஆரம்பிக்கப்படும் வகுப்புகளும் அதற்கான வயதெல்லைகளும்

| GRADE | LOWER NURSERY | UPPER NURSERY | PRE GRADE |
|---|---|---|---|
| AGE GROUP | 2 ½ - 3 | 3 - 4 | 4 - 5 |

- சர்வதேச தரத்திற்கேற்ப சிறார்களின் சிறந்த எதிர் காலத்தையும், தேவையையும் கருத்திற் கொண்டு ஆங்கில மொழி மூலம் கல்வி, சிறந்த பயிற்சி.
- நன்கு பயிற்றப்பட்ட துறைசார் ஆசிரிய குழாம்,
- நவீன தொழில் நுட்பத்தில் மாணவர்களுக்குரிய பயிற்சிகள் (Audio & Video Visual முறையினூடாக)
- Montessori க்கென சர்வதேச தரம் கொண்ட பாடநெறிகள். இவ்வாறான பாடநெறிகளைப் பயிலுவதன் மூலம் மாணவர்களின் புத்திக் கூர்மையையும் சிந்தனாசக்தியையும் அதிகரிக்க முடியும்
- கலை கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இசை சார்ந்த பயிற்சிகள்

வரையறுக்கப்பட்ட அனுமதிகளே உள்ளதால் February 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

BCHS No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.

Tel: 021 2224550 HotLines: 0714299935 / 0777222422 Email: info@bchs.lk

# வலுவேறாக்கம் நிகழ்வது நாட்டிற்கு நன்மை பயக்கும்

## ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு வெவ்வேறு பொறுப்புகள் காணப்படுகின்றன.

இவற்றில் ஒரு துறை மற்றொன்றின் அதிகாரத்தை எடுக்க முயற்சித்தாலும் பிரச்சினை ஏற்பட்டுவிடும் என்று சர்வதேச வர்த்தக அபிவிருத்தி அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளர்களில் ஒருவருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்களுக்கு அரசாங்கம் எப்போதும் தலை சாய்க்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது; இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பில் பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு வெவ்வேறு பொறுப்புகள் காணப்படுகின்றன. அவைதமது பொறுப்புக்களை செய்கின்றன.

எனினும் இவற்றில் ஒரு துறை மற்றொன்றின் அதிகாரத்தை எடுக்க முயற்சிக்கும் பட்சத்தில் நாட்டின் பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டுவிடும். அந்த வகையில் பெற்றோ



லின் விலையை அரசாங்கமே தீர்மானிக்கும். அதன்படியே அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கின்றன.

நாட்டின் நிதியை கட்டுப்படுத்தும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கின்றது. மக்களின் இறைமையே அரசியலமைப்பாகும். பாராளுமன்றத்துக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும் நிறைவேற்று அதிகாரத்துக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும் உள்ளன. அதே போன்று நீதித்துறைக்கும் அதிகாரங்கள் உள்ளன என்றார். (2-6)

# தமிழ் வேட்பாளர்களை களமிறக்கியுள்ள இடதுசாரி விடுதலை முன்னணி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இடதுசாரி விடுதலை முன்னணி போட்டியிடும் மாவட்டங்களையும் தலைமை வேட்பாளர்களையும் நேற்று அறிவித்தது. நாடு முழுவதிலும் 17 மாவட்டங்களில் அக்கட்சி போட்டியிடவுள்ளது. மாத்தளை, நுவரெலியா மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தமிழர்கள் தலைமை வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் வல்லிபுரம் திருநாவுக்கரசு, நடராஜா ஜனகன், பெருமாள் பூமிநாதன், எம். முனியாண்டி, அப்பாத்துரை குமாரசுவாமி, கதிரவேலுப்பிள்ளை சுதாகரன், அப்துல் காதர் நஜூமுதீன், துவான் அமீர் உசெய்ன் பாருக் ஆகிய தமிழ்பேசும் வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# ஊடகவியலாளர் பிரகீத்தை கண்டுபிடிக்க விசேட பொலிஸ் குழு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

காணாமற்போயுள்ள சுயாதீன ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான பிரகீத் ஹெக்நெலியகொடவைக் கண்டுபிடிப்பதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் இரண்டு நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிராஷாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

ஜனவரி 24ஆம் திகதி காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் தொடர்பில் கடந்த ஒரு மாத காலமாகவே எவ்விதத் தகவல்களும் வெளிவரவில்லை என்று தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக ஹோமாகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகள் இருவர் தலைமையில் இந்த இரு பொலிஸ் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியதாவது; லங்கா இ-நியூஸ் இணையத்தளம் உள்ளிட்ட இணையத்தளங்களுக்கும் ஏனைய ஊடகங்களுக்கும் எழுதிவரும் பிரகீத் ஹெக்நெலியகொட ஒரு சுயாதீன ஊடகவியலாளராவார். சம்பவ தினம் ராஜகிரியவிலுள்ள லங்கா இ- நியூஸ் அலுவலகத்தில் கடமைகளை முடித்துக் கொண்டு ஹோமாகமவிலுள்ள அவரது வீட்டிற்கு இரவு 9 மணியளவில் சென்று கொண்டிருந்த போதே அவர் காணாமற்போயுள்ளார். அன்றிரவு 9.30 மணியிலிருந்து அவரது கையடக்கத் தொலைபேசியும் செயலிழந்தது என்று அவரது மனைவியால் செய்யப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஹோமாகமவிலுள்ள அவரது வீட்டிற்கு அருகில் இலக்கத் தகடு அற்ற வெள்ளை வான் நிறுத்தப்பட்டிருந்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்ததாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் இரு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (2-6)

# குடைச் சின்னத்தில் இடதுசாரி முன்னணி போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இடதுசாரி முன்னணி குடைச்சின்னத்தில் 22 மாவட்டங்களில் போட்டியிடவுள்ளதாக முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகியோரும் தம்முடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாம் 40 வருட காலமாக தொழிற்சங்க ரீதியில் தனித்தும் பல வெகுஜன அமைப்பினருடன் இணைந்தும் ஜனநாயக ரீதியில் பல போராட்டங்களை நடத்தி வந்துள்ளோம். இன்று தமிழ் மக்களின் நன்மை கருதி ஸ்ரீகாந்தாவின் தலைமையிலான தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்புடன் இணைந்துள்ளோம்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தபோது அச்சமின்றி அவர்களுக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்தவர்கள் நாங்களே. அதனைத் தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் நன்று அறிவார்கள். ஆகையினாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகிய இருவரும் எம்மோடு இணைந்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்கவில்லை. அதனால் அவர்கள் அதிருப்தியடைந்திருப்பதுடன் சிலர் அரசாங்கத்துடன் இணைந்தும் போட்டியிடவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

எனவே அவ்வமைப்பின் அதிருப்தியாளர்கள் எதிர்காலத்தில் எம்மோடு இணைந்து செயற்பட முன்வரலாம். அவ்வாறு அவர்கள் எம்மோடு இணைந்து செயற்பட முன்வந்தால் அது இடதுசாரி அமைப்பான எமக்குப் பெரும் பலமாக இருக்கும் என்றார். (2-6)

# வாக்காளர் அட்டைகளை ஒரேநாளில் தபாலில் இடுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ள ஒரு கோடியே 88 இலட்சத்து 44 ஆயிரம் 500 பேரின் வாக்காளர் அட்டைகளும் ஒரே நாளில் தபாலில் இடுவதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள் ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களர் அட்டைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காமையினால் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே வாக்காளர் அட்டைகளை ஒரே நாளில் தபால் திணைக்களத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேலும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிற்கும் பிரதி தபால் அதிபருக்கும் இடையில் தேர்தல்கள் திணைக்களத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

பொதுத் தேர்தல் 2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் மேற்கொள் ளப் படவிருப்பதனால் வாக்காளர் அட்டைகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு நாட்களுக்குள் விநியோகித்து முடிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள்ள மேற்கொண்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-6)

# பாதைகள் வேறு பயணம் ஒன்று தெளிவுபடுத்துகிறது பொன்சேகா அணி

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் தனத்தனியே போட்டியிடுகின்ற ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பாதைகள் வெவ்வேறாக அமைந்திருக்கின்றபோதிலும் இரு தரப்பினதும் பயணம் ஒன்றே ஆகும் என்று ஜனநாயக தேசியக் கூட்டணி நேற்று முன்தினம் அறிவித்தது.

ஐக்கிய தேசிய முன்னணி தனித்துப் போட்டியிடுகின்றது என்பதால் அதன் மீது குற்றம் சுமத்த முடியாது. எந்த ஒரு கட்சிக்கும் தனித்துவம் இருக்கிறது. இதே போல்தான் தீர்மானங்களும் அமையப் பெறும். எவ்வாறிருப்பினும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் புரிந்துணர்வுடனேயே மேற்கொள்ளப்படும். முரண்பாடுகளுக்கு இங்கு இடமிருக்காது என்றும் ஜெனரல் பொன்சேகா தலைமையிலான கூட்டணி தெளிவுபடுத்தியுள்ளது.

சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பு மனுவில் அவர் கடந்த புதன்கிழமை கையெழுத்திட்டிருந்தார். இந்த வேட்பு மனுவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூட்டணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத்திடம் அனோமா பொன்சேகா உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; ஜனாதிபதித் தேர்தலில் அமையப் பெற்ற அதே கூட்டணியுடனேயே பொதுத் தேர்தலையும் சந்திப்பதற்கு நாம் தீர்மானித்திருந்தோம். விசேடமாக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் ஐக்கிய தேசிய முன்னணி தனித்துப் போட்டியிடுவதெனத் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. எனவே காலம் கடந்துவிட்ட நிலையில் இணைந்து போட்டி என்பது சாத்தியமில்லை என்றாகிவிட்டது.

எந்தவொரு கட்சிக்கும் அல்லது அரசியல் முன்னணிக்கும் தனித்துவம் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதன் இறைமை மதிக்கப்பட வேண்டியது என்பதாலும் அதேவேளை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினாலும் ஐக்கிய தேசிய முன்னணி அவ்வாறு தீர்மானித்திருக்க முடியும். இது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியைக் குற்றம் சுமத்துவதற்கு தயாரில்லை என்றார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டணியும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்தனியாக வெவ்வேறு சின்னங்களில் போட்டியிடுகின்றன.

(2-6)

# ஒலி மாசுவின் விஸ்வரூபம்





வாழ்வதற்கு ஏற்ற நல்ல சூழல் என்பது நல்ல காற்று, குடிநீர், இருப்பிடம் ஆகிய வற்றோடு முடிந்துவிடுவதில்லை. அமைதி யும் முக்கியம். ஓசை என்பது ஓசையாகவே இருக்க வேண்டும். அது ஒலியாக மாறி நம் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதற்கு அனு மதிக்கக் கூடாது.

மாசு நிறைந்த நீர், நிலம், காற்று ஆகிய வற்றால் உடல் ஆரோக்கியம் எப்படிப் பாதிக் கப்படுகிறதோ அதற்கு இணையாக ஒலி மாசு உடல் நலத்தையும் மன நலத்தையும் பாதிக்கும் என்பதை உணராவிடில் உடல் உறுப்புக்கள் நிரந்தரமாகப் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

ஒலியற்ற வாழ்வை நம்மால் கற்பனை செய்ய முடியாது. அதேநேரத்தில் ஒரு வருக்கு விருப்பமான ஒலி மற்றவருக்கு விரும்பத்தகாததாகவும் இருக்கலாம். இதில் சத்தம், ஒலி, இரைச்சல், கூச்சல், உறுமல் ஆகிய விதங்களில் வெளிப்படும் ஒலிகளில் எது மனித உடலையும் உள்ளத்தையும் பாதிப்படையச் செய்கிறதோ அது ஒலி மாசாகக் கருதப்படுகிறது.

ஆனால் பெரும்பாலானோர் சத்தம் நம்மை என்ன செய்துவிடும் என்றே கருது கின்றனர். அதிலும் இளைஞர்களின் விருப் பம் இவ்விடயத்தில் மோசமாக உள்ளது.

அதிக ஒலியே இன்பம் தரும் என்ற தவ றான எண்ணத்தால் மின்னணு ஒலியால் கவரப்பட்டு அதில் மயங்கிக் கிடக்கின்றனர் இன்றைய இளைஞர்கள். ஆனால் ஒலி என் பது அமைதியாகக் கொல்லும் தன்மையு டையது என்பதை அவர்கள் உணரவில்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயம். ஒலி யினால் ஏற்படும் அதிர்வுகளை நம் செவி ஏற்றுக் கொண்ட பின்னர் அதை நாம் புரிந்து செயற்பட மூளை துணை புரிகிறது.

அதேநேரத்தில் செவியால் குறிப்பிட்ட அளவுக்கு மேலான அதிர்வுகளைத் தாங்க முடியாது. அதாவது 20 ஆயிரம் அதிர்வு களுக்கு மேல் செவியால் கேட்க முடியாது. 120 டெசிபல் வரையிலான ஒலி அழுத் தங்களை மட்டுமே நன்றாகக் கேட்க முடி யும். இதன் அளவு அதிகரித்தால் செவிகள் பாதிக்கப்படும்.

ஆனால் நமது கிராமங்களில் நடை பெறும் எந்த நிகழ்ச்சியானாலும் ஒலி பெருக்கிகள் மூலம் அதிக ஒலியுடன் அதிக நேரம் பாடல்கள் ஒலித்துக் கொண்டே யிருப்பதைப் பார்க்கலாம்.

இதை நாள் முழுவதும் கேட்டுக் கொண் டிருந்தால் அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் இந்த ஒலி அளவை மீறியே பிறரிடம் பேசும் சூழலில் அவர்களது செவித்திறன் பாதிக்கப்படும்.

மேலும் அந்தப் பகுதிகளில் உள்ள பாட சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் கோயில்கள் ஆகியவை ஒலி மாசினால் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. ஒலி மாசைக் கட்டுப்படுத்த அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நமது செவித்திறனின் தன் மைக்கு ஏற்ப ஒவ்வொரு இயக்கத்தின் போதும் வெளியாகும் ஒலியின் அளவு அதன் தீவிரம் குறித்து வகுக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார மையம் வெளியிட்ட அறிக்கையில் உலகில் 5 சதவீத சிறுவர்கள் (10 வயதுக்கு உட்பட்டோர்) ஒலி மாசு காரணமாக கேட்புத் திறனை இழந்துள்ளதாகவும் 85 டெசிபல் இரைச்சல் சூழலில் பணியாற்றிய பலரும் காது இரைச்சல், தலைவலி, அயர்ச்சி, கிறுகிறுப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் இயந்திரம், வாகனம் சம்பந்தப்பட்ட தொழில்சங்கங்களில் பணிபுரிவோரில் நான் கில் ஒரு பங்கினர் கேட்கும் சக்தியை இழக்கத் தூண்டும் இரைச்சலால் அவதிப்படுவதாகவும் தெரிவிக்கிறது.

மேலும் 90 டெசிபலுக்கு மிகையான இரைச்சல் சூழலில் தொடர்ந்து இருப்பவர் களுக்கு செவிப்புல அயர்ச்சி ஏற்படுகிறது.

இதேவேளை நகரங்களில் உள்ள வீதியோர வியாபாரிகள் மற்றும் சாரதிகளில் 40 சதவீதத் தினர் காது இரைச்சலால் பாதிக்கப்படுவதாக வும் அமெரிக்காவில் ஒலி மாசினால் 10 சத விகிதத்தினர் செவித்திறனை இழப்பதாகவும் ஏறத்தாழ 8 கோடி மக்கள் ஒலி மாசினால் பாதிக்கப்படுவதாகவும் அந்த அறிக்கை தெரி விக்கிறது.

மேலும் 1000 பேருக்கு 35 பேர் எனும் விகி



தத்தில் காது இரைச்சல் நோயால் பாதிப்படை வதாகவும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களில் 10 சதவிகிதத்தினரும் கிராமப்புறங்களில் வசிப்பவர்களில் 7 சத விகிதத்தினரும் கேட்கும் திறன் குறைந்தவர்களாகவே உள்ள னர் என்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின் றன.

அதிக ஒலி ஒரு மனிதனை நிம்மதியாக உறங்கவிடுவதில்லை. குறைவான ஒலியும் மூளையின் முக்கிய மையங்களைப் பாதித்து இயல்பான உறக்கத்தைக் குலைத்துவிடு கிறது.

நரம்புத்தளர்ச்சி மற்றும் இதய நோய் உள்ள வர்கள் அதிக ஒலியையோ எதிர்பாராத சத்தத்தையோ கேட்க நேரிட்டால் கடுமை யான பாதிப்புக்கு ஆளாகின்றனர். இரைச் சல் தொடர்ந்தால் அதுவே மனிதனின் இறப்புக்கு வழிகோலும். எனவே இரைச் சலைக் கட்டுப்படுத்தி தடுத்து நிறுத்த வேண் டும். ஆனால் இன்றைய சூழல் எப்படி இருக் கிறது என்பதை நம்மைச் சுற்றி நடை பெறும் நிகழ்வுகளைப் பார்த்தால் புரிந்து விடும். தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத் திலிருந்து துக்க நிகழ்ச்சிகள் வரை தொடரும் பட்டாசு சத்தம் நம் காதுகளைப் பதம் பார்க் கிறது.

கனரக வானங்கள், பஸ்களில் பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் காற்று ஒலிப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை போதாது என்று இரு சக்கர வானங்களிலும் தங்கள் பங்குக்குப் பலவகை வினோத ஒலி எழுப்பும் மின் னணு ஒலிப்பான்களைப் பொருத்தி பாத சாரிகளை மிரட்டி வருகின்றன வாகன ஓட்டிகள்.

இதைக் கண்காணித்து கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண் டும்.

2000ஆவது ஆண்டில் உருவாக்கப் பட்ட ஒலி மாசுக் கட்டுப்பாடு சட்டத்தைத் திருத்தி விதிமுறைகளைக் கடுமையாக்க வேண்டும்.

மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நடவடிக் கைகளுக்கு எந்தவித குறுக்கீடுகளோ இடையூறுகளோ இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒலி மாசால் மனிதனுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்த விழிப்புணர்வு பிரசாரங் கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இயற்கை நமக்கு அளித்துள்ள சிறந்த ஒலி மாசுத் தடுப்பு சாதனமாகத் திகழும் மரங் களைச் சாலையோரங்களில் பெருமள வில் வளர்க்கும் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். இப்படி பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு ஒலி மாசு என்னும் அரக்கனை அழிக்க வேண்டும்.

**ஆர். மோகனராம்**

# தமிழ் தேசியத்தை உறுதியாக வலியுறுத்தினேன்

## அதற்காக விலக்கப்பட்டுள்ளேன்

### பத்மினி சிதம்பரநாதன்

(கொழும்பு)

தமிழ் தேசியத்தை உறுதியாக வலியுறுத்திய தம்மை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை எனவும் தமிழ் தேசிய ஒற்றுமையை காப்பதற்காகவே இது வரையும் எவற்றையும் விமர்சிக்காமல் இருந்ததாக வும் ஆனால் இப்போது அதற்கான அவசியம் வந்து விட்டதாகவே தாம் உணர்வதாகவும் பத்மினி சிதம்பர நாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பில் வேட்பாளராக அவரை சேர்த்துக் கொள்ளப்படாத தையிட்டு ஜி தொலைக்காட்சிக்கு அளித்துள்ள தொலைபேசி மூலமான நேர்காணலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினரான பத்மினி சிதம்பரநாதன் இதனைத் தெரி வித்துள்ளார்.

மேலும் தற்போதுள்ள இக்கட்டான நிலையில் தமிழ் தேசிய ஒற்றுமையை காப்பதற்காக அரசிய லிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கே விரும்பியதாக வும் தமிழ் தேசியத்தோடு உறுதியாக பயணிக்க



வேண்டும் என்று விரும்புபவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான அவசியத்தை பலர் வலியுறுத் தியுள்ள தாகவும் அதனால் தமது நிலைப் பாட்டை மீள்பரிசீலனை செய்வதாக வும் அவர் குறிப்பிட்டார். (6)

# கொழும்பில் ஆளும் கட்சி சார்பில் 2 தமிழர்களும் 2 முஸ்லிம்களும் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் இரண்டு தமிழர்களும் இரண்டு முஸ்லிம்களும் போட்டியிடுகின்ற னர்.

இருபத்தியிரண்டு வேட்பாளர்களில் இலத் திரனியல் ஊடகவியலாளர் ஒருவரும் போட்டி யிடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியில் வெற்றிலைச் சின்னத்தில் மலை யக மக்கள் முன்னணியின் சார்பில் பிரதிய மைச்சர் பெ. இராதாகிருஷ்ணனும் இ.தொ. கா. சார்பில் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் எம். இரவிச்சந்திரனும் போட்டியிடுகின்றனர்.

மேலும் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தி அமைச்சர் ஏ.எச். எம். பௌசி மற்றும் கொழும்பு மாநகர சபை முன்னாள் பிரதி முதல்வர் அசாத்சாலி ஆகியோர் போட்டி யிடுகின்றனர். (2-6)

# கண்டி மாநகர மேயர் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு

கண்டி மாநகர சபை மேயர் எல். பி. அளுவிஹார திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு மேற்படி மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கறுப்புப் பட்டிகளை கையில் கட்டி எதிர்ப்பு தெரிவித்ததோடு சபையிலிருந்து வெளிநடப்பும் செய்தனர்.

கண்டி மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் பகல் பதில் மேயர் தலைமையில் ஆரம்பமானது. இதன்போது மேற்படி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன் வெளிநடப்பும் இடம்பெற்றது. கறுப்புப் பட்டிகளை கையில் கட்டி வந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மேயர் அளுவிஹார பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு கடுமையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்தனர். அத்துடன் இது அவருக்கு எதிராக இழைக்கப்பட்ட சதித்திட்டம் எனவும் குற்றஞ்சாட்டினர். இதன் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர் கள் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர். மேற்படி கூட்டம் சுமார் 15 நிமிடங்களே இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகம்

(அல்வாய்)

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி கல்வி வலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதில் பாடசாலை அதிபர்கள் இடம்பெயர்ந்த மாணவர்களின் விபரங்களை சமர்ப்பித்து பாடநூல்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் இதுவரை கிடைத்த மாணவர்களின் விபரங்களை அவ்வவ் கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பித்து அனுமதி கிடைக்காத மாணவர்கள் பொருத்தமான பயிற்சிநெறிகளில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதற்காக இன்றும்நாளையும் கல்லூரியின் விடேச கருமபீடத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளதென்றும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்கள் கல்வித் தகைமை சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறும் பதில் கடமை அதிபர் எஸ். துரைராஜா அறிவித்துள்ளார். (6-4)

✠ ✠ ✠

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் மட்டம் 1 கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு அடுத்தமாதம் ஆறாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் தகைமைச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் சமுகளிக்குமாறு இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி லதா உமாசங்கர் கேட்டுள்ளார். (6-4)

## அறிவித்தல்

(அல்வாய்)

இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் உடனடியாக கல்வி அமைச்சின் பரீட்சை திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## ஆண்டு நிறைவு விழாவும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன (றூட்) 28ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு 16/2 சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உடுவில் உதவிப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (4-14)

## திருமஞ்சத் திருவிழா

சங்கானை நிகரை ஞான வைரவப் பெருமான் ஆலய அலங்காரத் திருவிழாவில் இன்று சனிக்கிழமை விசேட அபிஷேக வழிபாடுகள் இடம்பெற்று மாலை 6 மணியளவில் ஞானவைரவப் பெருமான் திருமஞ்சத்தில் திருப்பவனி வரும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளதுடன் கொழும்பிலிருந்து வருகை தந்த வாணவேடிக்கை கலைஞர்களின் வாண வேடிக்கை நிகழ்வும், விடேச மங்கல வாத்திய இசை நிகழ்வும் மற்றும் ராகமஸ் குழுவினர் வழங்கும் இன்னிசை ராகங்கள் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (6-4)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கே.விஜயதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரியும் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபருமான துரைஎங்கரசு கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலி, கிளை முகாமையாளர் எஸ்.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான வி.இளையகுட்டி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி கிழக்கு அமைப்பாளர் எஸ்.பி.எம்.தர்மராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

✠ ✠ ✠

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை வேலைப்பகுதி பொறியியலாளர் ஜி.சிவபாலன் மற்றும் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் திருமதி வ.சிவபாலன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-6)

## சொற்பொழிவு

கெருடாவில் அருள்மிகு தொட்டில் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் '' மகோற்சவத்தில் இரதோற்சவம்'' எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4)




## குளத்தில் மூழ்கிய மாணவன் பரிதாபகரமாக மரணம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையிலுள்ள குளமொன்றில் குளித்துக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குருநகர் சென்ஜேம்ஸ் பாடசாலையைச் சேர்ந்த மாணவரான அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் டிலான் (வயது-17) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

அவருடன் சேர்ந்து குளத்தில் நீராடிய மாணவர்களின் தகவலின்மூலம் மீட்கப்பட்ட இவரது சடலம் யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (2-30)

## மிதிவெடிகளை அகற்றுவதற்கான தொழில்நுட்ப ஆய்வுகள்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மிதிவெடிகளை அகற்றுவதற்கான தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட அரியாலை கிழக்கு, பூம்புகார், மணியம் தோட்டம், தனங்கிளப்பு, மறவன்புலோ, எழுதுமட்டுவாள், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் தெல்லிப்பழை, உதயநகர். வசந்தபுரம், கொழும்புத்துறைஆகிய பிரதேசங்களிலே இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் நடமாட்டத்திற்குரிய பிரதேசங்களில் டிடிஜி மற்றும் ஹலோ ரஸ்ற் ஆகிய நிறுவனங்கள் மேற்படி ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக் கது. (6-4-29)

## கண்ணிவெடிகள் அகற்றப்படும் வரை நடமாட்டத்தைத் தவிர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரியாலை தென்கிழக்கு (J/89), அரியாலை கிழக்கு (J/90) கிராமங்களான மணியம் தோட்டம், உதயபுரம், நாவலடி, பூம்புகார் மற்றும் அரியாலை கிழக்கு கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து அண்மையில் மக்கள் நடமாட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் மிதிவெடி, கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் காணப்படும் என்பதால் இவற்றை அகற்றியமைக்கான சான்றிதழ்கள் கிடைக்கப் பெறும்வரை இப் பிரதேசத்தினுள் உட்செல்ல வேண்டாம் என நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (6-14)

## முழுமையான அம்புலன்ஸ் சேவையை வழங்குமாறு கோரிக்கை

தற்போது தீவகப் பகுதியின் தேவைக்கென இரண்டு நோயாளர் அம்புலன்ஸ் வண்டியே சேவையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஊர்காவற்றுறை வைத்திய சாலை, வேலணை வைத்தியசாலை என்பவற்றில் சேவையில் ஈடுபடுத்தப்படும் இவ் வண்டிகளே நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, மண்டைதீவு, மண்கும்பான் ஆகிய இடங்களிற்கும் சேவையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரண்டு அம்புலன்ஸ் வண்டிகளால் மக்களுக்கான சேவையை முழுமையாக செய்யமுடியாதுள்ளதாகவும் மேலும் அம்புலன்ஸ் வண்டிகள் தேவைப்படுவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் அவற்றைப் பெற்றுத் தந்தால் மக்களுக்கு முழுமையான சேவையை வழங்கமுடியும் என வேலணை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சென‌விரட்ண தெரிவித்துள்ளார். (6-4-22)

## யாழ்.தொழில்நுட்ப கல்லூரியின் புதிய பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் செயல் திட்டத்தின் கீழ் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் 3 மாத காலப்பயிற்சி நெறிகளுக்கு மேலும் மூவாயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என பதில் கடமை அதிபர் எஸ். துரைராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய பயிற்சிநெறியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் இன்றும் நாளையும் தங்களது பிறப்புச் சான்றிதழ் மற்றும் தகைமைச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் போட்டோப் பிரதிகளுடன் சமுகமளித்து கல்லூரியில் இயங்கும் விசேட கருமபீடத்தில் பதிவுகளை மேற்கொண்டு அனுமதியைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (4-6)

## வேலணையில் கடலுணவுகளை சந்தைப்படுத்துவதற்கு நிரந்தர கட்டடம் இன்றி அல்லல்படும் மீனவர்கள்

(வேலணை)

வேலணை செட்டிப்புலம் மீனவர்கள் தாம்பிடித்துவரும் மீன்களை விற்பனை செய்வதற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் செட்டிப்புலம் மீன்பிடித் துறைமுகத்தில் சந்தைக்காக கட்டப்பட்ட கட்டடம் தற்போது பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மீன்களை கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகளும் பொது மக்களும் வெயிலிலும் மழையிலும் நின்றே பெற்றுக் கொள்வதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எனவே கடலுணவுகளை விற்பனை செய்வதற்கு சம்பந்தப்புட்டவர்கள் இந்தக் கட்டடத்தையோ அல்லது அதற்கு சமமான பிறிதொரு கட்டடத்தையோ ஒழுங்குபடுத்தி பெற்றுத்தரவேண்டும் என வேலணை செட்டிப்புலம் ஐயனார் மீனவர் சங்க அங்கத்தவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-22)

## சிறப்புச் சொற்பொழிவு

முழுநிலா கருத்தரங்கு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு குப்பிளான் தெற்கு அம்மன் ஆலய மண்டபத்தில் கிராமசேவகர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

"சமயம் காட்டும் சமூகம்" எனும் தலைப்பில் சைவப்புலவர் பொன்.சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (6-4)

# பிரசவ அறையில் மருத்துவர் கைகலப்பு சிசுவொன்று பரிதாபமாக உயிரிழப்பு

## பிரேஸிலில் சம்பவம்

பிரேஸில் நாட்டில் மருத்துவர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பினால் சிசுவொன்று பரிதாபமான முறையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரசவ அறையில் இரண்டு மருத்துவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேஸிலின் இவின்ஹெமா நகரில் உள்ள பிரபல வைத்தியசாலை ஒன்றில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது பாதுகாப்பு அதிகாரிகள் தலையீடு செய்து, கைகலப்பில் ஈடுபட்ட குறித்த இரண்டு மருத்துவர்களை பிரசவ அறையிலிருந்து வெளியேற்றியதாகவும் பிரசவ அறையிலிருந்த மற்றுமொரு மருத்துவர் குறித்த குழந்தையின் 32 வயதான தாயின் உயிரை காப்பாற்றியுள்ளார் என்றும் எனினும், குழந்தையின் உயிரைப் பாதுகாக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குறித்த இரண்டு மருத்துவர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும்

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரேஸில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (2-6)

# கடவுச்சீட்டு முறைகேடு தொடர்பில் இஸ்ரேலுக்கு அவுஸ்திரேலியா எச்சரிக்கை

தங்கள் நாட்டு கடவுச்சீட்டுக்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக இஸ்ரேலுக்கு அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது. அவுஸ்திரேலிய கடவுச்சீட்டுக்களை பயன்படுத்தி டுபாய் சென்ற இஸ்ரேல் உளவுத் துறையினர் ஹமாஸ் தலைவர் கொலை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனையடுத்து இஸ்ரேலுக்கு அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலியாவில் உள்ள இஸ்ரேல் தூதருக்கு வெளியுறவுத் துறை அமைச்சகம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதில் இஸ்ரேல் உளவுத் துறையினர் டுபாய் செல்வதற்கு 3 அவுஸ்திரேலியா கடவுச்சீட்டுகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இஸ்ரேல் அரசின் இந்த முறைகேடான நடவடிக்கைக்கு கடும் கண்டணம் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் இது குறித்து உரிய விளக்கம் அளிக்க வேண்டும். இது போன்ற நடவடிக் கைகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

டுபாய் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஹமாஸ் தலைவர் மஹ்மூத் ஜனவரி 20 ஆம் திகதி மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டார் என்றும் அவரை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதயாகுவின் உத்தரவின் பேரில் அந்நாட்டு உளவுத் துறையினர் கொன்றதாகத் தெரிகிறது. இவர்களில் 3 பேர் அவுஸ்திரேலியா பாஸ் போர்ட்டில் டுபாய் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)




# அரசியலமைப்புக்குள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## துருக்கி அரசு, இராணுவம் தெரிவிப்பு

துருக்கியில் அரசாங்கத்துக்கும், இராணுவத்துக்கும் இடையில் நிலவுகின்ற பதற்றத்தை குறைப்பதற்காக நடத்தப்பட்ட உயர் மட்ட பேச்சுக்களை அடுத்து இரு தரப்பினரும் நாட்டின் பிரச்சினை அரசியலமைப்புக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

அதிபர் அப்துல்லா குல், அவரது பிரதமர் தையிப் எர்டோகன் மற்றும் இராணுவத் தலைவர் ஜெனரல் இல்கர் பஸ்பக் ஆகியோர் கூட்டத்தில் இருந்து மூன்று மணி நேரத்தின் பின்னர் வெளிவந்தனர்.

7 வருடத்துக்கு முன்னர் அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்ததாக மேலும் உயர் அதிகாரிகள் மீது முன்னதாக ஒரு நீதிமன்றம் குற்றஞ்சாட்டியது. இதன் மூலம் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது. (2-6)

# அல்ஜீரிய பொலிஸ்மா அதிபர் சக அதிகாரியினால் சுட்டுக்கொலை



அல்ஜீரிய பொலிஸ்மா அதிபர் அலி டொயின்சீ சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அல்ஜீரிய தலைநகர் அல்ஜியர்ஸில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் தலைமையகத்தில் வழமையாக நடைபெறும் காலை நேரக் கூட்டத்தின் போது சக அதிகாரியொருவரினால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைப் பலர் நேரில் பார்வையிட்டுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட சக அதிகாரி தனக்குத் தானே சுட்டுக் கொண்டுள்ளதாகவும் சம்பவத்தில் அவர் படுகாயமடைந்துள்ளதாகவும் தற்போது அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் பொலிஸ்மா அதிபர் அலி டொயின்சீயின் பங்களிப்பு மிகவும் அளப்பரியதென சுட்டிக்காட்டப்படுகிறது. நாட்டுக்காக சேவையாற்றுவதற்காக அமரர் டொயின்சீ தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் தனது இரங்கல் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)

# நோபல் பரிசை வாங்க மறுத்த மொர்டசாய் வானுனு

இஸ்ரேல் அணு ஆயுதம் தயாரிப்பதை அம்பலப்படுத்திய மொர்டசாய் வானுனு நோபல் பரிசு பெறுபவர்கள் பட்டியலில் இருந்து தனது பெயரை நீக்கி விடும் படி கோரியுள்ளார்.

மொராக்கோ நாட்டை சேர்ந்தவர் மோர்டசாய் வானுனு. இந்த நாடு பேரழிவு ஆயுதங்களை தயாரிப்பதாக பிரிட்டன் பத்திரிகைக்கு பேட்டியளித்தார்.

நாட்டின் இரகசியத்தை அம்பலப்படுத்தியதற்காக இவருக்கு 18 ஆண்டு சிறை தண்டனை அளிக்கப்பட்டது. இஸ்ரேலை விட்டு மற்ற நாட்டுக்கு செல்வதற்கும் இருவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அணு ஆயுதம் உள்ளிட்ட பேரழிவு இவரது பெயரை நோபல் பரிசுக்காக பரிந்துரை செய்துள்ளது. தனது பெயர் நோபல் பரிசுக்கான பட்டியலில் உள்ளதை அறிந்த வானுனு தெரிவித்துள்ளதாவது,

கடந்த 1994ஆம் ஆண்டு பாலஸ்தீன தலைவர் யாசர் அராபத்துக்கும் இஸ்ரேலின் அணுகுண்டுத் தந்தையான பெரசுக்கும் சேர்த்து அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஷிமோன் பெரசுக்கு வழங்கப்பட்ட அந்த பரிசு எனக்கு தேவையில்லை. ஷிமோன் வாங்கிய பரிசு பட்டியலில் நானும் இடம்பெற விரும்பவில்லை. எனவே, நோபல் பரிசு பெற உள்ளவர்களுக்கான பெயர் பட்டியலில் இருந்து என்பெயரை நீக்கி விடுங்கள் என நோபல் பரிசு குழுவுக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்த தகவலை நோபல் பரிசு குழுவின் செயலர் கீர் லண்டஸ்டட் தெரிவித்துள்ளார்.(2-6)

# கோழிக்குஞ்சுகளின் விழித்திரை மனிதனைவிட விசேடமானது

## வோஷிங்டன் பல்கலைக்கழகத்தின் கண்டுபிடிப்பு

கோழிகளின் விழித்திரை மனிதனின் விழித்திரையை விட வண்ணங்களை பகுத்துணரும் சக்தி மிக்கது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வோஷிங்டன் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜோசப் கார்போ இது குறித்து கூறியதாவது, மனிதனின் விழித்திரையை விட பறவைகளின் விழித்திரை சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.

இதனால் தான் வானத்தில் வட்டமிடும் கழுகு கீழே கிடக்கும் சிறிய சுண்டெலியை கூட கூர்ந்து பார்த்து வேட்டையாடுகிறது. பாலூட்டிகள், பறவைகள் எல்லாம் ஒரே மூதாதையரை கொண்டவை. டைனோசர் உள்ளிட்ட இராட்சத விலங்குகள் கூட இரவில் வேட்டையாடும் குணம் கொண்டவையாக இருந்தவை. கும்மிருட்டிலும் கூட சுற்றுப் புறங்களை தெளிவாக பார்க்கும் திறன் வாய்ந்தவையாக இருந்தன. நாளடைவில் இந்த பழக்கம் பகலில் வேட்டையாட தொடங்கியதும் மங்கத் தொடங்கி விட்டது. ஆனால் இந்த விசேஷ குணத்தை பறவைகள் இன்று வரை கட்டிக் காக்கின்றன.

குறிப்பாக, கோழிகள் அதை விட கோழி குஞ்சுக்களுக்கு வண்ணங்களை பிரித்தறியும் வகையில் விழித்திரை பிரமாதமாக உள்ளது. மனிதனை பொறுத்தவரை சிவப்பு, நீலம், பச்சை வண்ணங்களை கூர்ந்து அறிய முடிகிறது.

ஆனால் கோழிக்குஞ்சுகளின் விழித்திரை புறஊதா கதிர்களை கூட பகுத்துணரும் தன்மை வாய்ந்தவை. இதனால் தான் கோழிகள் தனது இணையை அதன் இறகுகளை வைத்து அடையாளம் காண்கின்றன.

இதேபோன்ற குணம் மற்றப் பறவைகளுக்கும் உள்ளன. இதன் காரணமாக தான் சில பறவைகள் வண்ணமிகு பழங்களை சுவைப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. மனிதர்களுக்கு 200 வகையான பாரம்பரிய குறைபாடுகளின் காரணமாக குருட்டு தன்மை ஏற்படுகிறது. கோழிக்குஞ்சுகளின் விழித்திரையிலிருந்து ஸ்டெம் செல்லை பிரித்தெடுத்து மனிதர்களுக்கு பொருத்துவதன் மூலம் குருட்டு தன்மை மற்றும் நிறக்குருடு குறைப்பாட்டை போக்க முடியும் என நம்புகிறோம். இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. இவ்வாறு ஜோசப் கார்போ கூறினார். (2-6)

# வானில் பறப்பதற்கு உடை கண்டுபிடிப்பு



(கிறிஸ்ட்சர்ச்)

ஜெட்பேக் எனப்படும் பிரத்தியேக உடையை அணிந்து கொண்டால், விமானத்தின் உதவியின்றி பறவைகள் போல மனிதன் வானில் பறக்கலாம். இந்த ஜெட் பேக்கை நியூசிலாந்து நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

அதன் ஆராய்ச்சி விஞ்ஞானி கிளன் மார்டின் இந்த பறக்கும் உடையைத் தயாரிப்பதில் வெற்றி பெற்றுள்ளார். 200 குதிரைத் திறன் கொண்ட இரண்டு என்ஜின் பேக் கொண்ட இந்த ஜெட் உடையின் மாதிரியை கடந்த ஆண்டு ஜுலையில் அவர் அறிமுகம் செய்தார்.

இப்போது அந்த உடை முற்றிலும் வர்த்தக விற்பனைக்கு தயாராகிவிட்டது. இந்த உடையின் எடை 115 கிலோ. விமான கட்டுப்பாட்டு சர்வதேச விதிமுறைகளின் கீழ் இந்த எடை கொண்ட கருவியுடன் வானில் பறக்க விமானி உரிமம் தேவையில்லை.

எனவே இதை வைத்திருப்பவர் எப்போது வேண்டுமானாலும் அணிந்து கொண்டு வானில் வட்டமடிக்கலாம். இதன் தாங்கி முழுவதும் எரிபொருள் நிரப்பினால் 30 நிமிடங்களில் 30 மைல்கள் பறந்து செல்லலாம். இதில் மணிக்கு 60 கி.மீ வேகத்தில் 2400 மீற்றர் உயரம் வரை வானில் பறக்க முடியும். இந்த ஜெட் உடையை வர்த்தக ரீதியாக தயாரிக்க மார்ட்டின் ஏர்கிராப்ட் கம்பெனி அதிக முதலீடுகளை எதிர்பார்த்துள்ளது.

அது கிடைத்ததும் ஆண்டுக்கு 500 பேக்குளை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உடை அவசர கால மீட்புக் குழுவினர் இராணுவத்தினருக்கு மட்டுமின்றி தனியாருக்கும் அதிக பயன் அளிக்கும். இதன் விலை இந்திய ரூபா 37.5 இலட்சம் வரை இருக்கும் எனத் தெரிகிறது. (6-4)

# பயிற்சியாளரை கொன்ற திமிங்கலம்



அமெரிக்காவில் திமிங்கில சாகசக் காட்சி நடந்து கொண்டிருந்த அரங்கில் திடீரென பெண் பயிற்சியாளரை நீருக்குள் இழுத்துச் சென்று கடித்துக் கொன்றது ஒரு திமிங்கலம்.

நூற்றுக்காணக்கான பார்வையாளர்கள் கண்முன் நடந்த இந்த துயர நிகழ்ச்சி, ஆர்லாண்டோ மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. திமிங்கலங்கள் வித்தை காட்டும் சீ வேர்ல்டு காட்சியகம் ஆர்லாண்டோவில் உள்ளது. அங்கு பயிற்சியாளராக இருந்தவர் டான் பிரான்சி (வயது 40).

குளத்தில் கடல் திமிங்கலங்கள் விடப்பட்டிருந்தன. அவற்றின் சாகச காட்சி வழக்கம் போல புதன் கிழமை இரவு தொடங்கியது. அரங்கம் நிறைந்திருந்தது. திமிங்கலங்கள் நீருக்கு மேல் குதித்து வர அவற்றின் மீது உட்கார்ந்து ரசிகர்களுக்கு கையசைத்தார் டான்.

திடீரென ஒரு திமிங்கலம். டானை நீரில் தள்ளி பற்களால் கடித்து நீருக்குள் இழுத்துச் சென்றது. அவரை கடித்துக் குதறியது. திமிங்கலத்தைப் பற்றி விளக்கும்போது தவறி அவர் தொட்டிக்குள் விழுந்ததாகவும் ஒரு தகவல் உள்ளது.

பயிற்சியாளரை திடீரென திமிங்கலம் கொன்றதை பார்வையாளர்கள் திகிலுடன் பார்த்து கூச்சல் போட்டனர். செய்வ தியாது இங்கு அங்கும் ஓடினர். மற்ற பயிற்சியாளர்கள் ஓடி வந்து காப்பாற்ற முயன்றனர். ஆனால் முடியவில்லை. திமிங்கலம் அவரை கொன்றுவிட்டது. இதையடுத்து மக்கள் வெளியேற்றப்பட்டு காட்சியகம் உடனடியாக மூடப்பட்டது. (2-6)

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்



நெல் மூட்டுப் பூச்சி

நெற்பயிரில் சேதத்தை ஏற்புடுத்தும் பூச்சி பீடைகளுள் முக்கியமானது நெல்மூட்டுப் பூச்சியாகும். இது சாறு உறிஞ்சும் பூச்சியாதலால் வருணம் கெமிப்தெரா (Hemiptera) இனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த வருணத்தினுள் குடும்பம் அலிலிடட (Family: Aleydidae) இனுள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

நெல் மூட்டுப் பூச்சியிற்கு வெப்ரோ கொறைசா அக்கியூரா (Leptocoryza acuta) எனப் பெயரிட்டுள்ளனர். பொதுவாக சாறு உறிஞ்சும் பூச்சிகள் என்றாலே எங்களது கவனத்தை அதிகமாக வைக்க வேண்டும்.

வெட்டியுண்ணும் ( Bitin g an Chewing) வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளால் ஏற்படுத்தப்படும் சேதத்தை விட சாறு உறிஞ்சும் பூச்சிகளால் (Sucklng Insects) ஏற்படுத்தப்படும் சேதம் பாரதூரமானது. சாறு உறிஞ்சும் அதேநேரத்தில் பயிரின் வீரியத்தை கேள்விக்குறியாக்கிவிடும் வலிமை இவ்வகை பூச்சி பீடைகளுக்கு உண்டு.

**சேதம்**

நெல் மூட்டுப் பூச்சியினுடைய அணங்கு மற்றும் நிறைவுடலி பருவங்கள் நெல்மணியிலுள்ள சாற்றை தமது குத்தியுறுஞ்சும் வாயுறுப்பினால் உறிஞ்சி குடிப்பதனால் அந்த நெல் மணியில் எதுவுமே தங்கது. இறுதியில் நெல்மணியும் விருத்தியடையாது. சப்பி அல்லது பதர் (Chaffy) ஆகிவிடும்.

நெல்லின் பால் பிடிக்கும் பருவத்தில் (Milky Stage) இந் நெல் மூட்டுப் பூச்சிகள் விரைந்து இனம் பெருக்கி இளசுகளும் (அணங்கும்) பெரிசுகளுமாக (நிறைவுடலிகள்) இணைந்து நெல் மணிகளிலுள்ள சாற்றை உறிஞ்சிவிடுகின்றன. எனவே பால் பிடிக்கும் பருவத்திலிருந்து நெல்மணி முற்றும் வரை (Grain Tilling Stage) இப் பூச்சிப் பீடையினதும் தாக்கம் இருக்கும். நெல் மூட்டுப் பூச்சிகளின் சேதம் அதிகரித்தால் நெற்பயிரின் விளைச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டுவிடும். வெட்டிய வேளாண்மை தூற்றும் போது பதராகி காற்றோடு போய்விடும். வீடு வந்து சேராது. இதைத்தான் வெட்டிய வேளான்மை வீடு வந்து சேராது என்பார்களோ?


நெல் வயலினுள்ளே வரம்பில் நடக்கும் போது குறுக்கும் மறுக்குமாக இப் பூச்சி அங்கும் இங்குமாக தத்தித்திரியும். மெல்லிய பச்சைநிறமுடைய அணங்கு விருத்தியடையும் போது மெல்லிய மண்ணிறமாக மாறும். பெண் மூட்டுப் பூச்சிகள் முட்டைகளை இலையில் நிரையாக இட்டுவைக்கும்.

முட்டை → அணங்கு → நிறைவுடலி என்ற மூன்று பருவநிலைகளை உள்ளடக்கிய இம் மூட்டுப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் முட்டையைத் தவிர ஏனைய இரண்டுமே சாறு உறிஞ்சும் வாயுறுப்புக்களை கொண்டு சேதத்தை ஏற்படுத்துகின்றன.

நெல் மணியில் சாறு உறிஞ்சப்படுவதனால் நெற்கதிர் ஒன்றில் பாதிக்கப்பட்ட நெல் மணிகள் மீண்டும் வெள்ளையாக சப்பியாக இருக்கும். இவ்வாறாக சப்பியாக இருக்கும் நெல்மணியின் நிறம் சாறு உறிஞ்சப்பட்ட இடத்தில் வட்டமாக கறுப்பாக இருக்கும். கலங்கள் கருகியவாறு தோற்றமளிக்கும். இதனை வைத்தும் இதனது சேதத்தை இலகுவில் கண்டுபிடித்துவிடலாம்.




## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




(தனித்தனி நெல் மணிகள் சப்பியாக இருப்பதை அவதானிக்கவும்)

**முகாமைத்துவம்**

இவ்வாறான சாறு உறிஞ்சும் மூட்டுப் பூச்சிகள் அதிகளவில் நெல் வயல்களில் பெருகாதவாறு பார்த்துக் கொள்ளுதல் அவசியம். நெற்பயிர் தவிர ஒருவித்திலை களைகளில் தங்கி வாழும் தன்மையுடைய இப் பூச்சிகள் நெற்பயிரில் மட்டுமே விரைவில் இனம் பெருக்கும் தன்மையுடையவை.

குறிப்பிட்டளவு இரைகௌவிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் இப் பூச்சிப் பீடைக்கு இல்லாமையினால் இவை பெருகத் தொடங்கினால் கட்டுப்படுத்துவது கடினமாகிவிடும். ஆனாலும் இயற்கையாகவுள்ள இரைகௌவிகள் இதனது அணங்குப் பருவத்தை பிடித்துண்ணக் கூடியவை.

முட்டைகள் இலையில் இடப்படுவதால் ஒட்டுண்ணி தாக்கத்திற்கு உட்படக்கூடிய வாய்ப்பு உண்டு. அதிக எண்ணிக்கையில் பெருகிவிட்டால் ஊடுபுகுந்து தாக்கும் (Systemic Insecticide) ஒன்றினது உதவி மூலமே கட்டுப்படுத்த முடியும்.

நெல் மூட்டுப் பூச்சியின் எண்ணிக்கை அதிகரிக்குமாயில் அவை நெல் மணிகளை தாக்கி சேதத்தை ஏற்படுத்துவதனால் பூச்சி நாசினி விசிற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றோம். நெல் மூட்டுப் பூச்சியை கட்டுப்படுத்த பெந்தோயேற்று 5 DP (15 கி.கி./ கெக்டருக்கு). கார்பிரில 5 DP (15 கி.கி./ கெக்டருக்கு), குயினல்பொஸ 250 கிராம்/ லீற்றருக்கு, கார்போசல்பான் EC 200 கி/லீற்றர் (1400 மி.லீற்றர்/ கெக்டருக்கு) என்பனவற்றை பயன்படுத்தலாம்.

அநாவசியமான முறையில் பீடைநாசினி பிரயோகத்தை மேற்கொள்ளுவதை தவிர்க்க வேண்டும். நெல் சூழல் தொகுதியில் இருக்கக் கூடிய நன்மைதரும் உயிரினங்களின் செயற்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் இயற்கை வழி கட்டுப்பாட்டுக்கு உதவ முடியும்.

இந்த வகையில் சிலந்திகளின் உதவி முக்கியத்துவம் பெறுகின்றது. இவை அனைத்தையும் அவதானிக்கும் போது தேவை கருதிய பூச்சிநாசினிப் பிரயோகத்தை மேற கொள்ளுவது சிறந்தல்லவா. *(வளரும்)*

## துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 28-வது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 28ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் அடுத்த மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அன்ன பூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தம்பதிகளும், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கொழும்பு இர்ரமநாதன் கல்லூரி ஆசிரியை திருமதி உமாதேவி ஸ்ரீஸ்கந்தராஜா பரிசில்களை வழங்கவுள்ளார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (6-4)

## நூல் வெளியீடு

மு. பொவின் மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் கலாநிதி செல்வி திருச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் *யதார்த்தமும் ஆத்மார்த்தமும்* எனும் கட்டுரை பற்றி பேராசிரியர் சபா ஜெயராசாவும் *கவிதையில் துடிக்கும் காலம்* எனும் கவிதை பற்றி கொழும்பு பல்கலைக்கழக சர்வதேச சட்டத்துறைத் தலைவர் வி.ரி. தமிழ்மாறனும் *முடிந்து போன தசையாடல்* பற்றிய சிறுகதை பற்றி தெளிவத்தை ஜோசெப்பும் உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (6-4)



**நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. இரவிச்சந்திரன் உரையாற்றுவதையும் மற் றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.**

முயற்சியும் வாய்ப்பும் சந்திக்கும் போது அந்த இரண்டையும் அதிர்ஷ்டம் இணைத்து வைக்கிறது. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வாக்களிப்பை அதிகரிக்க பொருத்தமான நடவடிக்கை தேவை

ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ். மாவட்டத்தின் வாக்களிப்பு வீதம் குறைவாக காட்டி இருந்தது.

இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் கணிசமான தொகை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட முடியாது போனமை வாக்களிப்பு வீதத்தை குறைத்து விட்டது.

புலம் பெயர்வின் விளைவாக முகவரிகளை சரியாக இனம்காண முடியாத பரிதாபம் இதற்கு காரணம் எனலாம்.

இதற்கு மேலாக வாக்காளர் டாப்புகள் பூரணமாக திருத்தப்படாமையும் விநியோகப்படாத வாக்காளர் அட்டைகளின் தொகையை உயர்த்தி விட்டிருக்கலாம்.

எதுவாயினும் அனைத்து மக்களும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை.

எனவே நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்ட வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதற்கேற்றவாறு வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதே சமயம் வாக்காளர்களும் வாக்களிப்பது தங்கள் உரிமை என்பதை மனதார ஏற்றுக் கொண்டு தங்களுக்குரிய வாக்காளர் அட்டைகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளும் சிறு முயற்சியையேனும் எடுப்பது அவசியம்.

இதற்கு மேலாக தபால் மூல வாக்களிப்பு யாழ். மாவட்டத்தில் மிகவும் பரிதாபத்திற்குரிய இடத்தில் உள்ளது.

அரச பணியாளர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பங்கள் ஒழுங்கற்ற முறையில் பூரணப்படுத்தப்படுவதனால் அவை நிராகரிக்கப்படுகின்றன.

இதனால் அவர்கள் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை இழந்து போகின்றனர்.


எனவே இது தொடர்பில் யாழ். தேர்தல் திணைக்களம் தெளிவான விளக்கங்களை வழங்குவது நல்லதென கருதப்படுகின்றது.

அரச பணியாளர்களுக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை நிரப்பத்தெரியாதா? அப்படியானால் அவர்கள் ஏன்... என்ற கேள்விகள் எதுவும் நோக்கை அடைவதற்கு உதவமாட்டாது.

ஆக, யாழ். மாவட்டத்தின் வாக்களிப்பு வீதம் எதிர்வரும் தேர்தலில் நூறு வீதத்தை நோக்கியதாக இருப்பதற்கான பணிகளை முன்கூட்டியே எடுப்பது நல்லது.

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் இம்முறை என்றும் இல்லாத அளவில் போட்டியிடுவோர் அதிகரித்திருப்பதால் வாக்களிப்பதிலும் மக்கள் ஆர்வம் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா



போரின் வேகம் குறைந்து அமைதியின் காற்றை மக்கள் சுவாசிக்கத் தொடங்கியுள்ள வேளை மீண்டும் சில வருட இடைவெளியின் பின் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை கொண்டாடப்படவுள்ளது. இதேவேளை இவ் ஆலய தோற்றம், அதன் அமைவிடத்தை பற்றி நாம் அறிவதும் முக்கியமானதாகும்.

நெடுந்தீவுக்கு மேற்கே 11 மைல்களுக்கு அப்பாலும் இந்தியாவிற்கு நெருக்கமாக பாம்பன்-இராமேஸ்வரத்தில் இருந்து வடகிழக்கே 10 மைல்களுக்கு அப்பால் இலங்கையையும் இந்தியாவையும் ஊடறுத்துச் செல்லும் ஒடுங்கிய பாக்கு நீரிணையின் மையப்பகுதியில் கச்சதீவு அமைந்துள்ளது. இத்தீவின் நீளம் 1 மைல் ஆகவும், அகலம் சராசரியாக 300 யார் ஆகவும் உள்ளது.

வறண்ட வல்யத்துக்குரிய முட்புதர்களையும் சிறுசிறு பற்றைகளையும் கொண்ட மனித சஞ்சாரமற்ற இத் தீவிலேயே புனித அந்தோனியாரின் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இப்புனிதரின் ஆலயத்ததை தவிர வேறு கட்டிடங்களை இங்கு காணமுடியாது. 1913 ஆம் ஆண்டில் இவ் அந்தோனியார் ஆலய யாத்திரைத் திருத்தலம் ஆரம்பிக்கப்பட்டதாக சான்றுகள் தெரிவிக்கின்றன.

மீனவர்கள் கடலில் அடிக்கடி தாம் சந்திக்கும் ஆபத்துக்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவும், தொழில் முயற்சிகள் நல்லமுறையில் நடைபெறவும், புனிதரின் துணை வேண்டி இவ் ஆலயம் கட்டப்பட்டதாக சான்றுகள் உள்ளன.

ஆரம்பம் முதல் யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆளுகைக் குட்பட்ட பிரதேசமாக இருந்து வந்துள்ள கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தலம் தற்போது நெடுந்தீவு பங்குத் தந்தையின் கண்காணிப்பில் இருந்து வருகிறது. நெடுந்தீவு பங்கு ஆலயத்தில் இருந்தே கச்சதீவு திருவிழாவிற்கான ஆலய மணி, கொடிமரம், சுற்றுப்பிரகார கூடு என்பன கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு நெடுந்தீவு மக்கள் சுற்றுப்பிரகார கூட்டை கொண்டு செல்லும் போது வெறுங்கூடாகக் அதனைக் கொண்டு செல்லக் கூடாது எனக் கருதி மாதா சொரூபத்தினை உள்ளே வைத்துக் கொண்டு சென்று திரு நாள் முடிந்து வரும் போது திரும்பவும் மாதா சொரூபத்தினை கூட்டினுள் வைத்துக் கொண்டு வருவது வழக்கமாக உள்ளது. இவ்வாறு நெடுந்தீவு மக்களுக்கு மாதா சொரூபத்தோடு கச்சதீவுக்கு சென்று வருவதும் ஒரு யாத்திரை ஆகும். இத் தீவைச் சுற்றி அந்தோனியாரின் சொரூபங்களும் இரண்டு இடங்களில் புனித செபஸ்தியாரின் சொரூபமும் மத்திய பகுதியில் புனித சூசையப்பரின் சொரூபமும் வைக் கப்பட்டுள்ளன.

பழமையடைந்திருந்த இவ் ஆலயம் 2002 ஆம் ஆண்டு அப்போதைய நெடுந்தீவுப் பங்குத்தந்தையாகவிருந்த லூயிஸ் மொன்பேற் அடிகளாரினால் புனரமைக்கப்பட்டு அழகியஎழிலுடன் இன்று இவ்ஆலயம் காட்சியளிக்கின்றது.

இவ்வாறு பெயர்பெற்ற இப் புனிதரின் பதிக்கு இந்திய நாட்டிலிருந்தும் குருக்கள், துறவிகள், மக்கள் வருவது சிறப்பம்சமாகும். இவ்விழாவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்ல இந்தியாவிலிருந்தும் பல குருக்கள், துறவிகள், இறைமக்கள் கலந்துகொள்ள வழிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடல் கடந்து சென்று புனிதரை ஆராதிக்கும்வேளை அவரின் அருளும் ஆசீரும் எம் எல்லோருக்கும் கிடைக்கவும் தொடர்ந்தும் வரும் ஆண்டுகளில் எதுவித தடைகளும் முன்னரைப் போல ஏற்படாமல் எம் புனிதரின் விழாவை நாம் கொண்டாட அமைதியும் சுபீட்சமும் தொடர்ந்தும் எம் நாட்டில் நிலவ புனிதர் எமக்காக இறைவனிடம் பரிந்துரைக்க வேண்டி மன்றாடுவோம்.

**அருட்பணி இ.ஜி.விஜின்ரஸ்**
**யாழ். ஆயரின் செயலர்,**

# ஆலயப் புனரமைப்பு நிதியறிக்கையை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஆலயங்கள் பலவற்றுக்கு நிதியுதவி அளித்துள்ளது. இந்நிதியுதவி நேரடியாக ஆலயபரிபாலன சபையினருக்கும், மாவட்டச் செயலாளர்கள் ஊடாகவும் வழங்கப்பட்டன.

இங்ஙனம் வழங்கப்பட்ட நிதியுதவி தொடர்பாக அரச கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால், திணைக்களத்தில் பேணப்படும் ஆலயக் கோவைகளைச் சீர்செய்து கொள்வதற்கேதுவாக பூரணமான செலவின அறிக்கைளை ஆலய பரிபாலன சபையிடமிருந்து திணைக்களம் கோரியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஆலயப் பரிபாலன சபையினருக்கு திணைக்களம் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில், கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் நேரடியாகவோ அன்றி மாவட்டச் செயலாளர்கள் ஊடாகவோ ஆலயப் புனரமைப்பிற்கென நிதியுதவி பெற்ற ஆலயப்பரிபாலன சபையினர், நிறைவேற்றப்பட்ட புனரமைப்புப் பற்றிய அறிக்கை, பொருட்கொள்வனவிற்குரிய பற்றுச்சீட்டுக்கள், புனரமைப்புக்கு முன் பின் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பிரதேச செயலக தொழில் நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டு அறிக்கை ஆகியவற்றை நேரடியாகவோ அன்றி மாவட்டச் செயலகங்களிற் பணிபுரியும் அபிவிருத்தி உதவியாளர்கள் (இந்து சமயம்) ஊடாகவோ அனுப்பிவைக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

ஆலயபரிபாலன சபையினர் மேற்குறித்த பூரணமான செலவின அறிக்கைகளைச் சமர்ப்பிக்காதவிடத்து, எதிர் காலங்களில் மேலதிக அரச உதவிகளைப் பெறுவதில் தடைகளை எதிர்கொள்ள நேரும் எனவும் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பிற் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



...குளிராலோ பசியாலோ இந்த நாட்டிலேயே (அமெரிக்காவில்) நான் அழிந்த போக நேரலாம். ஆனால் இளைஞர்களே! ஏழைகள், அறியாமை மிக்கவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய நலனுக்காகப் போராடும் என்னுடைய இரக்கம், முயற்சி ஆகியவற்றை உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன். நாள்தோறும் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்த முப்பது கோடி மக்களின் நல்வாழ்வை மீட்டுத் தருவதற்காக உங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதாகச் சபதம் மேற்கொள்ளுங்கள்.

தன் நம்பிக்கையே வடிவெடுத்த, நிறைந்த் தூய்மையே வடிவெடுத்த ஆறு மனிதர்கள் ஆற்றிய பணிதான் இந்த உலகத்தின் வரலாறாகத் திகழ்கிறது. இரக்கம் உள்ள இதயம், சிந்தனை, ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

# மின் கட்டணத்தை குறைக்க விரைவில் நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கெரவலப்பிட்டிய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டம் திறக்கப்படுவதால் நூறு மெகா வோர்ட் மின்சாரம் தேசிய மின்னுற்பத்தியில் சேர்க்கப்படுகின்றது. புதிய மின்னுற்பத்தி நிலையங்களின் பலாபலன்கள் மக்களைச் சென்றடையும் வகையில் இந்த கட்டணக்குறைப்பு மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி கூறினார்.

வத்தளை கெரவலப்பிட்டிய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்; பெற்றோலியப் பொருட்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்வது அதிக செலவு மிக்க பணியாகும். அத்னால் இலாபகரமான மாற்று வழிகளைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இதன் பயனாக கெரவலப்பிட்டிய வில் உலை எண்ணெயைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யும் நிலையம் அமைக்கப்பட்டு இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதில் நூறு மெகா வோட் மின்சாரம் எண்ணெய் இல்லாமல் உற்பத்தி செய்யப்படுகிறது. இதேபோல் நுரைச்சோலை நிலக்கரி அனல் மின்னுற்பத்தி நிலையமும் மேல் கொத்மலை நீர்மின்னுற்பத்தி நிலையமும் நிர்மாணிக்கப்படுகிறது.

இருப்பினும் எம்முன்பாக இருக்கும் அடுத்த பிரச்சினை மின் கட்டணமாகும். அதனால் மின் நுகர்வோர் செலுத்துகின்ற கட்டணத்தை கூடிய கதியில் குறைப்பதே எமது அடுத்த பணியாகும்.

மின்னுற்பத்திச் செலவு குறைந்துள்ளது. ஆகவே நுகர்வோர் செலுத்தும் மின் கட்டணமும் குறைய வேண்டும். அதற்காக நாம் இப்போது செயற்படுகின்றோம். இந்த உற்பத்தி தேசிய கட்டமைப்பில் சேரும்போது அதன் நன்மையை நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு எம்முடையதே என்றார்.

கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்தின் முதலாம் கட்டம் ஏற்கனவே திறக்கப்பட்டதைத்



தொடர்ந்து 200 மெகா வோட் மின்சாரம் தேசிய மின்னுற்பத்தியில் சேர்க்கப்பட்டது.

மின்வெட்டைத் தவிர்ப்பதற்கான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய 294.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் இம்மின்னுற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (2-6)

# மகளிர் தினத்தை முன்னிட்டு போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையால் மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மகளிர்களுக்கான பூமாலை கட்டுதல், பன்னை வேலை மற்றும் பொது அறிவுப் போட்டிகள் என்பன நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் நகரசபை எல்லைக்குட்பட்ட மகளிர்கள் தங்களது பெயர் விபரங்களை நிர்வாக உத்தியோகத்தர், நகரசபை சாவகச்சேரி என்ற முகவரிக்குக் கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு நிர்வாக உத்தியோகத்தர் செல்வி வி. சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (4-29)

# அரசியல், தேசியம் என்பவற்றுக்கு அப்பால் தமிழ் மக்களுக்கு தேவைகள் உள்ளன

## தங்கேஸ்வரி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல்,தேசியம் என்பவற்றுக்கு அப்பால் தமிழ் மக்களுக்குத் தேவைகள் உள்ளன என்றும் நொந்துபோயுள்ள தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் அரசாங்கத்தை ஆதரிக்கத் தீர்மானித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மட்டு. மாவட்ட வேட்பாளருமான க. தங்கேஸ்வரி தெரிவித்தார்.

தேசியம், அரசியல் என்று கூறிக்கொண்டு இனியும் காலத்தை வீணடிக்க விரும்பவில்லை என்று தெரிவித்த அவர் மக்களுக்கு இப்போது உடனடித் தேவையாக இருக்கும் விடயங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியதே அரசியல்வாதிகளின் பொறுப்பாகும் என்று குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் அந்தத் தவறையே மேற்கொள்கிறது. அவர்களின் செயற்பாட்டைத் தேர்தல் மேடைகளில் அம்பலப்படுத்துவேன். 30 வருட காலமாகப்



பாதிக்கப்பட்டுள்ள படுவான்கரை உள்ளிட்ட பிரதேசங்களின் மக்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவேன் என்று தங்கேஸ்வரி மேலும் கூறினார். (2-6)

# பாலவர்ணம் சிவகுமார் உயிரிழப்பு தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

அண்மையில் பம்பலப்பட்டி கரையோரப் பகுதியில் சித்த சுயாதீனமற்ற பாலவர்ணம் சிவகுமார் என்ற இளைஞர் கடலில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிசாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சில பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் பாலவர்ணம் சிவகுமார் உயிரிழந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் நீதவான் லங்கா ஜயரட்ன உத்தரவிட்டுள்ளார். (2-6-4)

# உலகத் தலைவர்கள் போல எனது கணவரும் சிறையிலிருந்து போட்டியிட நேரிட்டுள்ளது

## அனோமா பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

உலகின் சிரேஷ்ட தலைவர்களாகப் போற்றப்படும் நெல்சன் மண்டேலா, ஜவகர்லால் நேரு போன்ற த்லைவர்களைப் போன்று ஜெனரல் சரத் பொன்சேகாவும் அசாதாரணமான சூழ்நிலையில் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடற்படை தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா கையொப்பமிட்ட வேட்பு மனுவை ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத்திடம் ஒப்படைத்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது ஓர் அசாதாரண சூழ்நிலை எனவும் மஹாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா மற்றும் நேரு போன்ற தலைவர்களின் வரிசையில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பெயரும் இணைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதும் தேர்தலில் போட்டியிடக் கூடிய அஞ்சா நெஞ்சம் கொண்டவர் தனது கணவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டாலும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் தொடர்ச்சியாக நாட்டு மக்களுக்கு சேவையாற்ற உள்ளதாக பொன்சேகா தம்மிடம் குறிப்பிட்டதாக அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (2-6-4)

# யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கொழும்பிலிருந்து இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் செயலாளரும் மற்றும் உபதலைவர் எம். தெய்வேந்திரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்கூட்டத்தில் இம்முறை நடைபெற்ற மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை தரம் நான்கில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள மரதன் ஓட்டப்போட்டிக்கு நடுவர்களைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வும் நடைபெறவுள்ளதால் தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் இதுவரை சித்தியடைந்த அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

கனேடிய பிரஜையான ரோய் மனோஜ் குமாரை விடுதலை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர் ஒன்றியம் கனேடிய தூதரகத்திற்கும் உதவி கோரியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் ரோய் மனோஜ்குமார் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த நான்கு வருடங்களாக அவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

வேக்கி டோக்கிகளை விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மனோஜ்குமார் விற்பனை செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குப் போதியளவு ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை என உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் இவ்வாறான 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இவ்வாறு தடுத்த வைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானோருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களோ அல்லது உரிய சாட்சியங்களோ இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக தடுக்கப்படவேண்டும் எனவும் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுவதன் மூலம் தமிழ் சமூகத்தில் அதிருப்தி அலை ஏற்படக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சிறுவர் போராளிகள் உள்ளிட்ட பெருந்தொகையான அரசியல் கட்சிகள் போதிய சாட்சியங்கள் எதுவுமின்றி தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6-4)

# வடக்கின் பெரும் போர் பரபரப்பான கட்டத்தில்;

# யாழ். மத்திய கல்லூரிக்கு வெற்றி இலக்கு 130

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போரில், யாழ். மத்திய கல்லூரி அணிக்கு வெற்றி இலக்காக 130 ஓட்டங்களை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அணி நிர்ணயித்தது.

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான 104ஆவது வருட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

மூன்று நாள் கொண்ட இன்னிங்ஸ் ஆட்ட மான இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வி.ஹரிவதனன் 85 ஓட்டங்களையும் வி.பிரணவன் 29 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஜி.ஜெரிக்துஷன், ரி.தர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஆர்.வதுசனன் 2 விக்கெட்டுக்களையும் என்.ஜனோசன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவ்து இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணிக்கு ஜெரிக் துஷன்–ஜேம்ஸ் ஜான்ஸன் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கியது.

இந்த ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது ஜி.ஜெரிக் துஷன் 80 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெனோசன் களமிறங்க மறு முனையில் அணித்தலைவர் ஜேம்ஸ் ஜான்ஸன் அரைச் சதத்தைக் கடந்தார். எனினும் அணித்தலைவர் எஸ்.ஜேம்ஸ் ஜான்ஸன் 75 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க யாழ். மத்திய கல்லூரி அணி 42.1 ஓவர்களில் 148 ஓட்டங்களை எடுத்து 6ஆவது விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து ஆர்.யுவேந்திரன் 02 ஓட்டங் களுடனும் ஜே.றதீசன் ஒரு ஓட்டத்துடனும் என்.ஜெனோசன் 09 ஓட்டங்களுடனும் எஸ்.தனுசன் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 49.2 ஓவர்களில் 159 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்து வீச்சில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக வி.ஹரிவதனன் 16 ஓவர்களில் 5 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 39 ஓட்டங் களைக்கொடுத்து 7 விக்கெட்டுக்களையும் எஸ்.உக்ஸன் 2 விக்கெட்டுக்களையும் விதுசன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 06 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றயாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வதுஷன்–தர்சனின் துல்லியமான பந்துவீச்சில் 67 ஓவர்களில் 124 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் எஸ்.பிரியதர்சன் 61 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் ஏ.விதுசன் 20 ஓட்டங்களையும் எஸ்.டக்ஸன் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் ஆர்.வதுஷனன் 16 ஓவர்கள்பந்துவீசி 8 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 22 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ரி.தர்சன் 16 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 20 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் என்.திவாகர், ஜே.ரதீஸன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


இதன் மூலம் 130 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்தியகல்லூரி அணி நேற்றைய 2ஆம் நாளான ஆட்டநேர முடிபில் 13 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் என்.திவாகர் 13 ஓட்டங்களுடனும் எஸ்.தனுசன் 05 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் எஸ்.டக்ஸன், வி.ஹரிவத னன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். மூன்றாவதும் இறுதி நாளான இன்று யாழ். மத்திய கல்லூரி அணி 8 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 98 ஓட்டங்களை எடுக்க வேண்டும்.

# ‘பொன் அணிகள் போர்’ ஆரம்பம்

# யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 180; யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நிதானம்







(யாழ்ப்பாணம்)

நிகேதன், நிரோஷன் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்ட யாழ்ப்பாணக்கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் 3 விக்கெட்டையிழந்து 113 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பொன் அணிகள் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 93ஆவது வருட கிரிக்கெட் தொடர் நேற்று யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இரண்டு நாள் இன்னிங்ஸ் ஆட்டமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆரம்பத்தில் தடுமாறியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் என்.பிரசாத் ஒரு ஓட்டத்துடனும் மதுஷன் 06 ஓட்டங்களுடனும் கே.பிரஷோபனன் 17 ஓட்டங்களுடனும் ஆர்.பெண்டில்கரன் 05 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் பி.சிறிகுகன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க யாழ்ப்பாணக் கல்லூரி அணி 19.3 ஓவர்களில் 45 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் 6 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த நிகேதன்–நிரோஷன் ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை மீட்டனர்.

இதன் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 31 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. இதில் சிறப்பாகத் துடுப்பெடுதாடிய எஸ்.நிரோஷன் 86 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க யாழ்ப்பாணக் கல்லூரி அணி 44 ஓவர்களில் 124 ஓட்டங்களை எடுத்து 6ஆவது விக்கெட்டை இழந்தது.

அடுத்து களமிறங்கிய சீராளன் அதிரடி யாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் பொறுப் பான ஆட்டத்தை வழங்கிய ஜே.நிகேதன் 98 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 49 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்த வந்த ரி.பிரியலக்ஷன் பூச்சியத்துடனும் என்.பென்ஜமின் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

இந்நிலையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 58.3 ஓவர்களில் 180 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் உப அணித்தலைவர் எஸ். சீராளன் 43 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் எஸ்.கோமலதரன் ஆட்டமிழக்காமல் ஒரு ஓட்டத்தையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எம்.டி.சஜீந்திரன் 15 ஓவர்கள் பந்துவீசி 55 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் எம்.வி.ஹமில்ரன் 12 ஓவர்கள் பந்துவீசி 58 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஏ.கவாஸ்கர், ஏ.எம்.மனோஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஹமில்ரன்–மனோஜ் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 22 ஓவர்களில் 60 ஓட்டங்களை இணைப்பாட்டமாக வழங்கிய போது ஏ.எம்.மனோஜ் 68 பந்துகளில் (ஒரு பவுண்டரிகள் அடங்கலாக) 18 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஜி.ஆர்.ரியூடர் 08 ஓட்டங்களுடனும் இ.ஜெகான் 06 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 34.4 ஓவர்களில் 99 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டை இழந்தது.

அடுத்து எம்.மைக்கல் களமிறங்க மறு முனையில் ஆரம்பம் முதலே சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய எம்.வி.ஹமில்ரன் அரைச் சதத்தை கடந்து அசத்தினார்.

இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 42 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 113 ஓட்டங்களை எடுத்தது.

இதில் எம்.வி.ஹமில்ரன் 137 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 58 ஓட்டங்களுடனும் எம்.மைக்கெல் ஒரு ஓட்டத்தையும் ஆட்டமிழக்காமல் எடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் எஸ்.நிரோஷன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப் போட்டியில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ளநிலையில் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலுள்ளது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

வடக்கின் மற்றுமோர் தென்றல்
10ஆவது ஆண்டில்
LIDO BRAND SOCKS
எமது நாட்டின் பிரபல்ய நிறுவனமான, M.R.M.SAMEER அவர்களின்
LIDO BRAND SOCKS
கல்லூரி மாணவர்களின் மனம் கவர்ந்த சாதனை முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது, அளப்பரிய சாதனை..
யாழ். குடா நாட்டில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவர்களின், உளம் கவர்ந்த கள்வன், பாவனையில் நீண்டகால உத்தரவாதம், பளிச்சிடும் வெண்மை, தரமான அளவு, இதமான நிறை.
இத்தனையும் அடங்கியது LIDO BRAND SOCKS

உங்கள் சேவைக்காக,
யாழ். முகவர்,
அ.கிரீசன், ந.கோகுலன்
0776282795, 0789131480
(498)

நாவாந்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# 8 நாடாளுமன்ற ஆசனங்களுக்காக...

யாழ். தேர்தல் களத்தில் போட்டியிடுவதற்காக சுயேட்சைக் குழுக்களும் கட்சிகளுமாக 32 குழுக்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது யாழ்.மாவட்டத்திலேயே கூடுதலான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் 16 கட்சிகளும் 16 சுயேட்சைக் குழுக்களும் ஆகும். கட்சிகளில் சிறிலங்கா தேசிய முன்னணியினதும் சுயேட்சைக் குழுக்களில் நான்கினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது 15 கட்சிகளும் 12 சுயேட்சைக் குழுக்களுமாக 27 தரப்புக்கள் இந்தத் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றன. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி,ஐக்கிய தேசியக் கட்சி,சோசலிச சமத்துவக் கட்சி,

எல்லோரும் மக்கள் எல்லோரும் மன்னர்கள் கட்சி,ஜனசத பெரமுன , ஈழவர் ஜனநாயக முன்னணி,ஐக்கிய சோசலிச கட்சி,இடதுசாரி விடுதலை முன்னணி, ஜனநாயக தேசியக் கூட்டணி, பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (புளொட்டுடன் இணைந்து),

ஜனநாயக ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட தரப்புகளே கட்சிகளாகத் தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத் தேர்தல் களமே தற்போது மிகவும் சூடானதும், பரபரப்பானதுமாக மாறியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமிழரசுக் கட்சியில் போட்டியிடுகின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தரப்புகள் நேற்று தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளது. குடாநாட்டின் முன்னணி புத்திஜீவிகள் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பாடசாலையில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்,வைத்தியர்கள் எனப் பலரையும் கொண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளது.

முதன்மை வேட்பாளராக யாழ்.குடாநாட்டின் முன்னணி பொருளியல் ஆசிரியரான சின்னத்துரை வரதராஜா முன்னணி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பட்டியலில் பத்மினி சிதம்பரநாதன் , செல்லத்துரை கஜேந்திரன்,கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் பிரேரிக்கப்பட்டிருக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் வீ. ஆனந்தசங்கரி முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் சார்பில் ஸ்ரீதரன் போட்டியிடுகின்றார்.

இதனிடையே இடதுசாரி விடுதலை முன்னணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் முதன்மை வேட்பாளராக நல்லதம்பி ஸ்ரீகாந்தா குறிப்பிடப்பட்டுள்ளார்.

மற்றுமொரு வேட்பாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான கனகலிங்கம் சிவாஜிங்கம் பிரேரிக்கப்பட்டிருக்கின்றார்.

மேலும் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியின் வேட்புமனுவும் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் 8 இடங்களை ஈ.பி.டி.பி. கட்சியும், 4 இடங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியும் பெற்றிருக்கின்றன.

இதில் முதன்மை வேட்பாளராக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்டத்திலிருந்து 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 7 ஆயிரத்து 265 வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கிய மூன்று கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசிய முன்னணி ஆகிய கட்சிகளுக்கு 22 மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

நாடு முழுவதிலும் 298 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. 196 நாடாளுமன்ற ஆசனங்களுக்காகவே 7 ஆயிரத்து 265 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக நாடு தழுவிய ரீதியில் பெற்றுக் கொள்ளும் வாக்குகளின் அடிப்படையில் 29 தேசியப் பட்டியல் ஆசனங்கள் வழங்கப்படவுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 836 வேட்பாளர்கள் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தமிழர் செறிந்து வாழும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 324 வேட்பாளர் போட்டியிடுகின்றனர். (சு-5,7,30)

## முகாமிலிருந்து விடுவிக்கப்பட...

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவின் தெஹல்கா வாராந்த சஞ்சிகைக்குவழங்கிய செவ்வியில்தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் விரைவாக விடுவிக்கும் தேவை அரசாங்கத்திற்கு இருந்தது. எனினும் சரத் பொன்சேகா அதனை நிராகரித்தார்.

முகாமிலிருந்த ஆயிரக் கணக்கானவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் அவர்களை மீண்டும் முகாமிற்கு இழுத்துவருமாறு சரத் பொன்சேகா உத்தரவிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய நாடுகள் இடம்பெயர்ந்தவர்களை விடுவிக்குமாறு எமக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் சரத் பொன்சேகா பாதுகாப்புக் குறித்து வாதிட்டார். இறுதியில் ஜனாதிபதி அதில் தலையிட நேர்ந்தது.

மூன்று இலட்சம் பேர் முகாம்களில் இருந்தனர். 20 ஆயிரம் விடுதலைப்புலிகள் தப்பிச் சென்றுள்ளனர். எங்கே பாதுகாப்பு இருக்கின்றது என ஜனாதிபதி பொன்சேகாவிடம் கேட்டார் எனவும் கோத்தபாய குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தை மாற்றும் தேவை மேற்குலக நாடுகளுக்கு இருக்கின்றது. போர்க்குற்றம் குறித்து விசாரிக்க வேண்டும் என இந்த நாடுகளே கூறி வருகின்றன.

ஜெனரல் சரத் பொன்சேகா 70 அறைகளை ஒதுக்கியிருந்த விடுதியின் பாதுகாப்பு அதிகாரி முன்னாள் இராணுவ அதிகாரியாவார்.

அவர் பதிவு செய்யப்பட்ட சகல வீடியோ காட்சிகளையும் அழித்துள்ளதுடன் வரவு குறிப்பேட்டிலும் மாற்றங்களைச் செய்திருப்பதாகத் தெரிய வந்துள்ளதெனவும் கோத்தபாய ராஜபக்ஷ தனது செவ்வியில் கூறியுள்ளார். (சு-5)

## வன்னி...

முன்னாள் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.சூசைதாசன் உட்பட 10 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் போட்டியிடுகின்றனர்.

மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரத்தினம் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்றனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில், 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யவுள் ளனர். அரசியல் கட்சிகள், சுயேட்சைகள் உட்பட 34 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (சு-9)

## ஜனாதிபதித்...

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மற்றும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மாத்தளை , அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் புத்தளம் ஆகிய தேர்தல் தொகுதிகளின் வாக்கெடுப்பு ரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சு-5)

## தேர்தல்...

தென்னிலங்கையில் வன்முறைகள் ஆரம்பித்துள்ளதாகவும் இந்த வன்முறைகளில் 10ற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு பசியால பகுதியில் உள்ள மினுவன்கொட பொலிஸ் பிரிவில்அரச ஆதரவாளர்களின் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களில் பெருமளவான வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (சு)

abe
**to your future in**
**Business Information Systems, Marketing & Human Resource Management (HRM)**
**The Association of Business Executives**
**Academic Programme 2010/2011**

இலங்கை உட்பட சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் முறைமை, சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவ கற்கைகளினை யாழ். குடாநாட்டில் முதன்முதலாக JTI இல் ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்களை கோருகின்றோம்.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்: (ஏதாவது ஒன்று போதுமானது)**
- க.பொ.த (சா/த) தகுதி/ பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மேலும் வெளிநாடுகளில் வேலையுடன் தொடரக்கூடிய வசதிகள் புதிய விசா முறைக்கமைய விண்ணப்பிக்கவுள்ளோர்.
- தொழில் சார் அனுபவமுடையவர்கள்
- அடிப்படை தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள்
- 16வயதுக்கு மேற்பட்டவர்களாயின் இக் கற்கையினை தேர்ந்தெடுக்க முடியும்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக, உயர் தொழில்நுட்ப பட்டதாரிகள் Exemption ற்கு விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பிக்கும் முறை:**
- சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையில் 3 செயற்றிட்டங்களிலிருந்து விரும்பும் செயற்றிட்டத்தினை குறிப்பிட்டு நேரடியாக அல்லது தபால் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

**தெரிவு முறை:**
- கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ABE அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 10.03.2010**

விரிவுரைகள், பரீட்சைகள் யாழ். நகரில் நடைபெறவுள்ளதுடன் இலங்கை உட்பட 70 நாடுகளில் உயர் சம்பளத்துடன் கூடிய தொழில்வாய்ப்பினையும் ABE பெற்றுத்தருகின்றது.

குறிப்பு:- எமது கருத்தரங்குகளில் கலந்து கொள்ள முடியாதவர்கள் ஞாயிற்றுக்கிழமை (28.02.2010) காலை 10.00 அல்லது 2.00 மணியளவில் நிலையத்தில் தொடர்பு கொண்டு கட்டணசலுகை விபரங்களை அறியுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**விண்ணப்பிக்கும் முகவரி மற்றும் மேலதிக விபரங்களிற்கு:**
Director (Ad.)
Department of Business Studies,
Jaffna Technical Institute (JTI)
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 5670345
e-mail:jtiedu@gmail.com
(சி-4517)

**கணக்குப்பதிவுநர் தேவை**

யாழ். நகரத்திலுள்ள வர்த்தக நிறுவனமொன்றுக்கு கணக்குப்பதிவுநர் (Bookkeeper) தேவை.
கணக்குப் பதிவில் அனுபவமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பத்தை விளம்பர இல. 1000,
மே/பா. வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
(1000)

**கலைத்தூது அழகியல் கல்லூரியின் வளர்ச்சிக்காக**
**திருமறைக் கலாமன்றம் வழங்கும்**
**சலங்கையின் ஜதிகள்**
-நடன அளிக்கைகள்-
காலம்: 28.02.2010 ஞாயிற்றுக்கிழமை (நாளை)
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். திருமறைக் கலாமன்றம்.
(சி-4514)

**பாராளுமன்றத் தேர்தல் 2010 - யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்**

தந்தை செல்வாவின் நேர்மையும் தளபதி அமிர்தலிங்கத்தின் வீரமும் என்றும் எமது ஆராதனைக்கு உரியன.




இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்
( தமிழ் தேசியக் கூட்டமைப்பு )
**எஸ். எக்ஸ். குலநாயகம்** அவர்கள்
வெற்றி வெற உழைப்போம் - வட்டுக்கோட்டைத் தொகுதி வாக்காளர்கள்.



**இலங்கைத் தமிழரசுக் கட்சி** ✕

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.